அலகு 7

# மாட்சிமை தாங்கிய மாமன்னர் நாட்டின் அரண்



16ஆவது மாட்சிமை தாங்கிய மாமன்னர் அல் சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அல் முஸ்தப்பா பில்லா ஷா இப்னி அல்மர்ஹோம் சுல்தான் ஹஜி அமாட் ஷா அல்- முஸ்தப்பா இன் பில்லா.

(மூலம்: Istana Negara)

மாட்சிமை தாங்கிய மாமன்னர் ஊடகவியலாளர்களுக்கு உணவு கொடுக்கும் காணொலி.

## சாரம்

நம் நாட்டின் நிர்வாகத்தில் மாமன்னரின் அமைப்புமுறை மிக முக்கியமானது. இந்த அலகில் மாமன்னரின் ஆட்சி முறை, அரசவை மன்ற கடமைகள், அரியணை அமர்வின் சடங்குகள் ஆகியன விவாதிக்கப்படும். மேலும், இந்த அலகு மாமன்னரின் அதிகாரங்களையும் அரசுரிமைச் சின்னங்களையும் மாட்சிமை தாங்கிய பேரரசியாரைப் பற்றியும் விளக்கும்.

## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. நாட்டின் முகாமைத் தலைவராக மாமன்னர்.
2. மாமன்னரைத் தேர்வு செய்வதில் அரசவை மன்றத்தின் பங்கு.
3. மாமன்னரின் அரியணை ஏறும் சடங்குகள்.
4. மாமன்னரின் அதிகாரங்கள்.
5. மாமன்னர், பேரரசியாரின் அரசுரிமைச் சின்னங்கள்.



11 செப்டம்பர் 1959ஆம் நாளன்று முதலாம் மாட்சிமை தாங்கிய மாமன்னர் துவான்கு அப்துல் ரஹ்மான் இப்னி துவான்கு முகமதுவும் பேரரசியார் துவான்கு புவான் பெசார் குர்சியா பிந்தி துவான்கு பெசார் புர்ஹானுடினும் முதல் கூட்டரசு மலாயாவின் நாடாளுமன்றத் திறப்பு விழாவிற்கு வருகை தந்தனர்.

(மூலம்: Arkib Negara Malaysia)

முதலாம் மாமன்னரின் அரியணை ஏறும் சடங்கின் காணொலி.

**குடியியல் நெறி**

மதித்தல்

AKPS

## அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத் திறன்

1. மாமன்னர் நாட்டின் முகாமைத் தலைவர் என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
2. மாமன்னரைத் தேர்வு செய்வதில் அரசவை மன்றத்தின் பங்கினை ஆராய்தல்.
3. மாமன்னர், பேரரசியார் ஆகியோரின் அதிகாரங்கள், அரசுரிமைச் சின்னங்கள் ஆகியவற்றை விளக்குதல்.

## நாட்டின் முகாமைத் தலைவர்

கூட்டரசு மலாயா சுதந்திரம் அடைந்த பிறகு மாமன்னர் அமைப்புமுறை அமைக்கப்பட்டது. மாமன்னரின் அமைப்புமுறை கூட்டரசு அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டபோது உருவாக்கப்பட்டது. கூட்டரசு அரசியலமைப்புச் சட்டத்திற்கேற்ப மாமன்னர் நாட்டின் முகாமைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.




**மாட்சிமை தாங்கிய மாமன்னர்**
**நாட்டின் முகாமைத் தலைவர்**




**சட்டத்துறை**



**நிர்வாகத்துறை**



**நீதித்துறை**

நாட்டின் முகாமைத் தலைவர் என்ற முறையில் மாமன்னர் **சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை** ஆகிய அரசு அமைப்புகளுக்குத் தலைமை ஏற்பார்.

**விரைந்து பதிலளி**

மாமன்னர் தலைமை ஏற்கும் மூன்று அரசுத் துறைகளைக் குறிப்பிடுக.

**சொற்களஞ்சியம்**

**சட்டத்துறை**: நாட்டின் சட்டதிட்டங்களை உருவாக்கும் துறை.
**நிர்வாகத்துறை**: ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளை அமல்படுத்தும் துறை.
**நீதித்துறை**: நாட்டின் சமநீதியை நிர்வகிக்கும் துறை.

மாட்சிமை தாங்கிய மாமன்னரின் நியமனம் ஒன்பது மலாய் அரசர்கள் மத்தியில் நுட்பமான சுழல்முறையில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. மாட்சிமை தாங்கிய மாமன்னரின் தேர்வு கூட்டரசு அரசியலமைப்புச் சட்டத்தின்படி செய்யப்படுகிறது.



5 அரசவை மன்ற சட்டத்தில் மாட்சிமை தாங்கிய மாமன்னர் பதவி உறுதிமொழி எடுத்துக் கையெழுத்திடுவார்.

4 பிரதமர் மாட்சிமை தாங்கிய மாமன்னரின் நியமனத்தை நாளிதழில் ஊடகச் செய்தியாக வெளியிடுவார்.

3 அரசியலமைப்புச் சட்டம் 3ஆம் அட்டவணைப்படி மாட்சிமை தாங்கிய மாமன்னரின் உறுதிக் கடிதம் மக்களவைக்கும் மேலவைக்கும் அனுப்பப்படும்.

2 அரசவை மன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாட்சிமை தாங்கிய மாமன்னர் அல்லது சுல்தான் பெயரைப் பிரகடனப்படுத்தும்.


1 ஒன்பது அரசர்களின் கமுக்கமான வாக்கெடுப்பின்வழி அரசவை மன்றம் மாமன்னரின் நியமனத்தை முடிவு செய்யும்.

மாமன்னர் நியமன நிரல்முறை வரைபடம்
(மூலம்: Pejabat Penyimpan Mohor Besar Raja-raja)

மாட்சிமை தாங்கிய மாமன்னரின் அரசர் அமைப்பு நம் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அரணாகத் திகழ்கிறது. குடிமக்களாகிய நாம் இந்த அமைப்பு முறையைப் போற்றுவதோடு மதிக்கவும் வேண்டும்.

**நடவடிக்கை** **நிரல் வரைபடம்**

நிரல்முறை வரைபட விவரத்தைக் கொண்டு மாமன்னர் தேர்ந்தெடுக்கப்படும் முறையை முழுமைப்படுத்துக.



**21ஆம் நூற்றாண்டுக் கற்றல் திறன்** **யோசி - இணை - பகிர்**

மாமன்னர் நம் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அரணாகத் திகழ்கிறார்.
1. இந்த நடவடிக்கையை இருவராகச் சேர்ந்து செய்யவும்.
2. பத்து நிமிடங்கள் கொடுக்கப்படும்.
3. மாட்சிமை தாங்கிய மாமன்னரைப் போற்றுவதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
4. கிடைக்கப்பெற்ற குறிப்புகளைப் படைத்திடுக.

8.1.1, K8.1.6 ஆசிரியர் குறிப்பு
- நாட்டின் உயரிய தலைவரான மாட்சிமை தாங்கிய மாமன்னரின் அதிகார வரம்பை அறிந்து கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.
- ஒற்றுமையின் அரணாக விளங்கும் மாமன்னரைப் போற்றுவதன் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## அரசவை மன்றம்

1948ஆம் ஆண்டில் தர்பாருக்குப் பதிலாக அரசர் மன்றம் அதிகாரப்பூர்வமாக உருவாக்கப்பட்டது. அரசர் மன்றம் என்பது ஒன்பது மலாய் அரசரையும் நான்கு மாநில ஆளுநரையும் கொண்ட அமைப்பாகும். மாட்சிமை தாங்கிய மாமன்னரை நியமனம் செய்வதே அரசர் மன்றத்தின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும்.



ஒன்பது மலாய் அரசரையும் நான்கு மாநில ஆளுநரையும் அரசர் மன்றம் கொண்டுள்ளது.
(மூலம்: Pejabat Penyimpan Mohor Besar Raja-raja)

| மாட்சிமை தாங்கிய மாமன்னர் நியமனத் தேர்வுக்கு முன் | மாட்சிமை தாங்கிய மாமன்னர் நியமனத் தேர்வின் போது | மாட்சிமை தாங்கிய மாமன்னர் நியமனத் தேர்வுக்குப் பின் |
|---|---|---|
| • அரசர் மன்றம் நியமனத் தேர்வின் தேதியை உறுதிச் செய்தல். | • வாக்கெடுப்பின்வழி அரசர் மன்றம் புதிய மாமன்னரைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்கிறது. | • தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்னரின் பெயரை அரசர் மன்றம் பிரகடனப்படுத்தும். |

அரசர் மன்றம் நேர்த்தியாக நடத்திய மாட்சிமை தாங்கிய மாமன்னர் நியமனத் தேர்தல் செயல்முறை, அரசமைப்பு முறையின் அவசியத்தைப் பிரதிபலிக்கின்றது.

### விரைந்து பதிலளி

எப்போது அரசர் மன்றம் அமைக்கப்பட்டது?

### உங்களுக்குத் தெரியுமா?

- 1896ஆம் ஆண்டு 'தர்பார்' தோற்றுவிக்கப்பட்டது. இதில் பேராக், சிலாங்கூர், பகாங், நெகிரி செம்பிலான் (ஐக்கிய மலாய் மாநிலங்கள்) ஆகிய மாநிலங்களிலிருந்து நான்கு அரசர் பங்கேற்பர்.
- அரசர் மன்றத்தின் முத்திரைக் காப்பாளர் மன்றம் அனைத்து அரசர் மன்ற விவகாரங்களையும் நிர்வகிக்கின்றது.

ஆசிரியர் குறிப்பு: மாட்சிமை தாங்கிய மாமன்னரைத் தேர்ந்தெடுப்பதில் அரசர் மன்றப் பங்கினை மாணவர்கள் புரிந்து கொள்ள வழிகாட்டுதல்.

8.1.2

## மாட்சிமை தாங்கிய மாமன்னரின் முடிசூட்டு விழா

தேர்ந்தெடுக்கப்பட்ட மாட்சிமை தாங்கிய மாமன்னரின் முடிசூட்டு விழா தேசிய அரண்மனையில் மிக விமரிசையாகப் பிரகடனப்படுத்தப்படும்.



**1** அரசர் மன்றக் கூட்டத்தில் மாட்சிமை தாங்கிய மாமன்னர் பதவியேற்பு உறுதிமொழி எடுக்கிறார்.



**2** அரசர் முத்திரைக் காப்பாளர் வழங்கிய பதவியேற்பு உறுதிமொழிக் கடிதத்தில் மாட்சிமை தாங்கிய மாமன்னர் கையெழுத்திடுகிறார்.



**3** முடிசூட்டு விழாவின்போது மாமன்னர் முன்னிலையில் பிரதமர் **நியமனக் கடிதத்தை** (Watikah) வாசிக்கிறார்.



**4** மாட்சிமை தாங்கிய மாமன்னர் நாட்டின் முகாமைத் தலைவராகப் பதவி ஏற்றுக்கொண்டதன் அடையாளமாகக் 'கிரீஸை' முத்தமிடுகிறார்.



**5** முடிசூட்டு விழாவின்போது மாமன்னர் நாட்டைச் சமநீதியும் நடுநிலைமையும் நிறைந்த நாடாக உருவாக்க உறுதிமொழி எடுக்கிறார்.

முடிசூட்டு விழாவின்போது மாமன்னரின் இறையாண்மையும் மாட்சிமையும் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. ஆகையால், மாட்சிமை தாங்கிய மாமன்னரின் திடமிகு அமைப்பை நாம் கண்டிப்பாகப் போற்ற வேண்டும்.

(மூலம்: Istana Negara dan Jabatan Penerangan Malaysia)

16ஆம் மாட்சிமை தாங்கிய மாமன்னரின் முடிசூட்டு விழா காணொலி

### உங்களுக்குத் தெரியுமா?

அரியணை அமர்வு விழாவிற்கு முன்னதாக மாட்சிமை தாங்கிய மாமன்னர் பதவியேற்பு உறுதிமொழிக் கடிதத்தில் கையெழுத்திடுவார்.

### சொற்களஞ்சியம்

**நியமனக் கடிதம்-** அங்கீகாரக் கடிதம் அல்லது பதவியேற்புக் கடிதம்.

8.1.3 ஆசிரியர் குறிப்பு: மாட்சிமை தாங்கிய மாமன்னரின் முடிசூட்டு விழாவைப் புரிந்து கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## மாட்சிமை தாங்கிய மாமன்னரின் அதிகாரங்கள்

நம் நாடு அரசியலமைப்பு மன்னராட்சி முறைமையைக் கொண்டுள்ளது. மாட்சிமை தாங்கிய மாமன்னர் அரசியலமைப்புச் சட்டத்திட்டத்தின்படி நம் நாட்டை ஆட்சி புரிகிறார். நாட்டின் முகாமைத் தலைவராக விளங்கும் மாட்சிமை தாங்கிய மாமன்னர் சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய துறைகளில் அதிகாரங்களைக் கொண்டுள்ளார்.



மாட்சிமை தாங்கிய மாமன்னர் பினாங்கு, மலாக்கா, கூட்டரசுப் பிரதேசம், சபா, சரவாக் ஆகிய சுல்தான் அல்லாத மாநிலங்களுக்கு இஸ்லாமியத் தலைவராக இருக்கிறார்.



மாட்சிமை தாங்கிய மாமன்னர் பிரதமரையும் அமைச்சரவை உறுப்பினர்களையும் நியமனம் செய்கிறார்.



மாட்சிமை தாங்கிய மாமன்னர் மலாய்க்காரர்கள், **பூமிபுத்ராக்கள்** ஆகியோரின் சிறப்பு நிலையைப் பாதுகாக்கிறார்.



மலேசியக் குடிமக்கள் என்ற வகையில் பிற இனங்களின் நலன்களை மாட்சிமை தாங்கிய மாமன்னர் பாதுகாக்கிறார்.



மாட்சிமை தாங்கிய மாமன்னர் இராணுவப் படையின் உயர் ஆணையாளராகத் திகழ்கிறார்.


**விரைந்து பதிலளி**

மாட்சிமை தாங்கிய மாமன்னரின் அதிகாரத்தைக் குறிப்பிடுக.

**சொற்களஞ்சியம்**

**பூமிபுத்ரா**: பூர்வீகக் குடிகள்

ஆசிரியர் குறிப்பு: மாட்சிமை தாங்கிய மாமன்னரின் அதிகாரத்தை அறிந்து கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.



UNDANG-UNDANG
MALAYSIA

Akta 789

மாட்சிமை தாங்கிய மாமன்னர் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட மசோதாவுக்கு **ஒப்புதல்** அளிக்கிறார்.



மாட்சிமை தாங்கிய மாமன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்டவும் ஒத்தி வைக்கவும் களைக்கவும் அதிகாரம் கொண்டிருக்கிறார்.



மாட்சிமை தாங்கிய மாமன்னர் நாட்டின் பெருமைக்குரிய விருதுகளை வழங்குகிறார்.

### உங்களுக்குத் தெரியுமா?

- மசோதா அமைச்சரால் தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும். ஏற்கப்பட்ட மசோதாவிற்கு மாட்சிமை தாங்கிய மாமன்னர் ஒப்புதல் வழங்கி கூட்டரசு முத்திரையைப் பதிப்பார்.

(மூலம்: Istana Negara, Kementerian Pertahanan Malaysia dan Jabatan Penerangan Malaysia)

மாட்சிமை தாங்கிய மாமன்னர் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு சமநீதி அடிப்படையில் கடமைகளை ஆற்றுகிறார்.

**சொற்களஞ்சியம்**

**ஒப்புதல்**: மாட்சிமை தாங்கிய மாமன்னர் அல்லது ஒரு தரப்பினரால் வழங்கப்பட்ட அனுமதி அல்லது ஒப்புதல் மூலம் சட்ட அமலாக்கத்தைச் செயல்படுத்த முடியும்.

21ஆம் நூற்றாண்டுக் கற்றல் திறன்

### படத்தைக் கருத்தூன்றுதல்

1. குழுக்களை உருவாக்குதல்.
2. படத்தை உற்று நோக்கியப்பின் உங்களுக்கு ஏற்பட்ட உணர்வைக் கூறுதல்.
3. அரசமைப்பு முறையின் முக்கியத்துவத்தைப் பல மூலங்களில் திரட்டி விளக்குதல்.
4. திரட்டிய குறிப்புகளைப் படைத்தல்.



8.1.4
K8.1.7

## மாட்சிமை தாங்கிய மாமன்னரின் அரசுரிமைச் சின்னங்கள்

பெருமைமிகு மாட்சிமை தாங்கிய மாமன்னரும் பேரரசியாரும் நம் நாட்டின் தனித்தன்மையின் அடையாளமாகக் திகழ்கின்றனர். இந்தத் தனிச்சிறப்பை மாமன்னர் முடிசூட்டுவிழா, பிறந்தநாள், நாடாளுமன்றத் திறப்பு, சில குறிப்பிட்ட விழாக்களின்போது பயன்படுத்தப்படும் அரச வைபவ உடை, அரசுரிமைச் சின்னங்கள் மூலம் காணலாம்.

### அரச வைபவ உடை

#### அரசத் தலைப்பாகை (Tengkolok Diraja)

- தங்க நூலால் பின்னப்பட்ட கறுப்பு நிறத்திலான தலைப்பாகை.
- இந்த அலங்காரக் கட்டு டெண்டாம் தாக் சுடா (Dendam Tak Sudah) என அழைக்கப்படுகிறது.





#### அரசரின் குட்டை கிரீஸ் (Keris Pendek Diraja)

- பழைய கிரீஸ் முனையைக் கொண்டு செய்யப்பட்டது.
- இதன் உறை தங்கம் பதிக்கப்பட்ட தந்தத்தால் ஆனது.

#### உங்களுக்குத் தெரியுமா?

- அலங்காரக்கட்டு என்பது தலைப்பாகையில் கட்டப்பட்டதாகும்.
- 'டெண்டாம் தாக் சுடா' என்பதன் பொருள் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும் மலாய் அரசர்களின் போராட்டம் ஆகும்.

ஆசிரியர் குறிப்பு அரச வைபவ உடையையும் அரசுரிமைச் சின்னங்களையும் மாணவர்கள் அறிந்து கொள்ள வழிகாட்டுதல்.



## அரசு அலங்காரப் பதக்கம் (Pending Diraja)

- தங்கத்தால் செய்யப்பட்ட இப்பதக்கத்தில் மாணிக்கக்கற்கள் பதிக்கப்பட்டிருக்கும்.
- இப்பதக்கம் இடைப்பட்டைக்கான அலங்காரப் பொருளாகும்.



## முஸ்காட் (Muskat)

- மாட்சிமை தாங்கிய மாமன்னரின் அதிகாரப்பூர்வ அரச உடை முஸ்காட் ஆகும்.
- முஸ்காட் கருப்பு வண்ண உரோம நூலால் தைக்கப்பட்டு, தங்கநூலால் பின்னப்பட்டிருக்கும்.



## அரச மாலை (Kalung Diraja)

- வெண்தங்கத்தால் செய்யப்பட்ட இம்மாலையில் வைரக்கற்கள் பதிக்கப்பட்டிருக்கும்.
- இம்மாலையை மாட்சிமை தாங்கிய பேரரசியார் அணிந்திருப்பார்.

## அரசக் கிரீடம் (Pemeles)

- அரசக் கிரீடத்தை மாட்சிமை தாங்கிய பேரரசியார் அதிகாரப்பூர்வ நிகழ்ச்சியான முடிசூட்டு விழாவின்போது அணிவார்.
- வெண் தங்கத்தால் செய்யப்பட்ட இக்கிரீடத்தில் வைரக்கற்கள் பதிக்கப்பட்டிருக்கும்.




# அரசுரிமைச் சின்னங்கள்



## நீண்ட அரச கிரீஸ் (Keris Panjang Diraja)

- கிரீஸின் முனை அரசரைக் கொண்ட ஒன்பது மலாய் மாநிலங்களிலிருந்து பெறப்பட்ட இரும்பால் செய்யப்பட்டதாகும்.
- கிரீஸின் முனையிலிருந்து உறைவரை தங்க முலாம் பூசப்பட்டிருக்கும்.



## சோகான் அலாம் (Cogan Alam)

- சோகான் அலாம் வெள்ளியால் செய்யப்பட்டது.
- அந்த வட்டத்தைச் சுற்றிலும் 11 கூட்டரசு மலாயா மாநிலங்களின் சின்னங்கள் இருக்கும்.



## சோகான் அகாமா (Cogan Agama)

- வெள்ளியால் செய்யப்பட்ட இது பெரிய முனையைக் கொண்டிருக்கும்.
- அதன் தண்டிலும் முனைப்பகுதியிலும் புனித அல்குர் ஆன் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.



## சொக்மார் (Cokmar)

- ✿ வெள்ளியால் செய்யப்பட்ட சொக்மார் முனையில் கோள வடிவத்தைக் கொண்டுள்ளது.
- ✿ சொக்மார் முந்தைய காலத்துப் போர்க்கருவியாகும்.



## மஞ்சள் குடை & தோம்பாக் பெராம்பு (Payung Ubur-ubur Kuning dan Tombak Berambu)

- ✿ மேல் முனையில் அரச வண்ணம் மஞ்சள் நிறத்திலான பிறையும் நட்சத்திரமும் இருக்கும்.
- ✿ தோம்பாக் பெராம்பு மூன்று முனைகளைக் கொண்டிருக்கும்.



## வாள், நீண்ட கிரீஸ், பட்டை அரச கிரீஸ் (Pedang, Keris Panjang dan Sundang Diraja)

- ✿ இம்மூன்றும் மலாய்க்காரர்களின் பண்டைய ஆயுதங்களாகும்.
- ✿ நீண்ட கிரீஸ், பட்டை அரச கிரீஸ் ஆகிய இரண்டும் வெள்ளி முலாம் பூசப்பட்டு அவற்றின் அடிப்பகுதியிலும் உறையின் மீதும் சித்திர வேலைப்பாடுகளைக் கொண்டிருக்கும்.

அரச வைபவ உடையும் அரசுரிமைச் சின்னங்களும் மாட்சிமை தாங்கிய மாமன்னரின் அரசமைப்பின் மேன்மையைப் பிரதிபலிப்பதால் நாம் பெருமைப்பட வேண்டும்.

**விரைந்து பதிலளி**

மாட்சிமை தாங்கிய மாமன்னரின் அரசுரிமைச் சின்னங்கள் இரண்டனைக் குறிப்பிடுக.

8.1.5

**நடவடிக்கை**

அரச வைபவ உடையையும் அரசுரிமைச் சின்னங்களையும் மரவரைபடத்தைக் கொண்டு உருவாக்குக.

## இறையாண்மை அரசே

சுதந்திரம் பெற்றதிலிருந்து 16 மாட்சிமை தாங்கிய மாமன்னர்கள் சுழல்முறையில் நாட்டின் முகாமைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். ஆட்சியாளர் எனும் முறையில் மாட்சிமை தாங்கிய மாமன்னர் நம் நாட்டின் சுபிட்சத்தை இந்நாள் வரை பாதுகாத்து வருகிறார்.

1



**துவான்கு அப்துல் ரஹ்மான்**
Almarhum Tuanku Abdul Rahman ibni Almarhum Tuanku Muhammad
ஆகஸ்ட்டு 1957 - ஏப்ரல் 1960
**நெகிரி செம்பிலான்**

2



**சுல்தான் ஹிசாமுடின் அலாம் ஷா**
Almarhum Sultan Hisamuddin Alam Shah ibni Almarhum Sultan Alaiddin Sulaiman Shah
ஏப்ரல் - செப்டம்பர் 1960
**சிலாங்கூர்**

3



**துவான்கு சைட் புத்ரா அல்-ஹாஜ்**
Almarhum Tuanku Syed Putra Alhaj ibni Almarhum Syed Hassan Jamalullail
செப்டம்பர் 1960 - செப்டம்பர் 1965
**பெர்லிஸ்**

4



**சுல்தான் இஸ்மாயில் நசிருடின் ஷா**
Almarhum Sultan Ismail Nasiruddin Shah ibni Almarhum Sultan Zainal Abidin
செப்டம்பர் 1965 - செப்டம்பர் 1970
**திரெங்கானு**

5



**சுல்தான் அப்துல் ஹலிம் முவாட்ஷாம் ஷா**
Almarhum Sultan Abdul Halim Mu'adzam Shah ibni Almarhum Sultan Badlishah
செப்டம்பர் 1970 - செப்டம்பர் 1975
**கெடா**

6



**சுல்தான் யாஹ்யா பெத்ரா**
Almarhum Sultan Yahya Petra ibni Almarhum Sultan Ibrahim
செப்டம்பர் 1975 - மார்ச் 1979
**கிளந்தான்**

7



**சுல்தான் ஹாஜி அகமட் ஷா அல் முஸ்தா இன்**
Almarhum Sultan Haji Ahmad Shah Al-Musta'in Billah ibni Almarhum Sultan Abu Bakar Ri'ayatuddin Al-Mu'adzam Shah
ஏப்ரல் 1979 - ஏப்ரல் 1984
**பகாங்**

8



**சுல்தான் இஸ்கண்டார்**
Almarhum Sultan Iskandar ibni Almarhum Sultan Ismail
ஏப்ரல் 1984 - ஏப்ரல் 1989
**ஜொகூர்**

**விரைந்து பதிலளி**

இரண்டு முறை மாட்சிமை தாங்கிய மாமன்னராகத் தேர்வு செய்யப்பட்ட சுல்தானைக் கூறுக.

**9**



**சுல்தான் அஸ்லான் முஹிபுடின் ஷா**
Almarhum Sultan Azlan Muhibbuddin Shah ibni Almarhum Sultan Yussuf Izzuddin Shah Ghafarullahu-lah
ஏப்ரல் 1989 - ஏப்ரல் 1994
**பேராக்**

**10**



**துவான்கு ஜபார்**
Almarhum Tuanku Ja'afar ibni Almarhum Tuanku Abdul Rahman
ஏப்ரல் 1994 - ஏப்ரல் 1999
**நெகிரி செம்பிலான்**

**11**



**சுல்தான் சலாஹுடின் அப்துல் அஜிஸ் ஷா அல் ஹாஜ்**
Almarhum Sultan Salahuddin Abdul Aziz Shah Alhaj ibni Almarhum Sultan Hisamuddin Alam Shah Alhaj
ஏப்ரல் 1999 - நவம்பர் 2001
**சிலாங்கூர்**

**12**



துவான்கு சைட் சிராஜீடின்
Tuanku Syed Sirajuddin ibni Almarhum Tuanku Syed Putra Jamalullail
டிசம்பர் 2001 - டிசம்பர் 2006
**பெர்லிஸ்**

**13**



சுல்தான் மிசான் சைனால் அபிடின்
Al-Wathiqu Billah Sultan Mizan Zainal Abidin ibni Almarhum Sultan Mahmud Al-Muktafi Billah Shah
டிசம்பர் 2006 - டிசம்பர் 2011
**திரங்கானு**

**14**



துவான்கு அல்-ஹஜ் அப்துல் ஹலிம் முவாட்சம் ஷா
Almarhum Almu'tasimu Billahi Muhibbuddin Tuanku Alhaj Abdul Halim Mu'adzam Shah ibni Almarhum Sultan Badlishah
டிசம்பர் 2011 - டிசம்பர் 2016
**கெடா**

**15**



சுல்தான் முகாமட் V
Sultan Muhammad V
டிசம்பர் 2016 - ஜனவரி 2019
**கிளந்தான்**

**16**



சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அல் முஸ்தபா பில்லா ஷா
Al-Sultan Abdullah Ri'ayatuddin Al-Mustafa Billah Shah ibni Almarhum Sultan Haji Ahmad Shah Al-Musta'in Billah
ஜனவரி 2019 - இதுவரை
**பகாங்**

நீங்கள் நாட்டிற்கும் மாட்சிமை தாங்கிய மாமன்னருக்கும் விசுவாசம் செலுத்துவதன் அவசியத்தைக் கூறுக.

## நடவடிக்கை

தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, முதல் மாமன்னர் தொடங்கி தற்போதைய மாமன்னர் வரையிலான நிரல்முறையில் படைப்பாக்கத் திறனோடு பட்டியலிடுக.

8.1.1
K8.1.8

(மூலம்: Laman web rasmi Pejabat Penyimpan Mohor Besar Raja-raja)

உருவாக்குவோம் வாரீர்

# தேசிய அரண்மனைப் படச் சட்டகம்


## கருவிகளும் பொருள்களும்



மணிலா அட்டை


தேசிய அரண்மனை படம்


பனிக்கூழ் குச்சி



பசை நாடா


கத்தரிக்கோல்



வண்ண நாடா (Reben)


குறிவுத் தூவல்


## செய்முறை:

1 
படைப்பாக்கத் திறனுடன் பனிக்கூழ் குச்சிக்கு வண்ணம் பூசவும்.

2 
பனிக்கூழ் குச்சிகளைப் படச்சட்டக வடிவில் வைக்கவும்.

3 
படச்சட்டகத்தின் பின்னால் மணிலா அட்டையை வைக்கவும்.

4 
மணிலா அட்டையின் பின்புறத்தில் வண்ண நாடாவைப் பசை நாடா கொண்டு ஒட்டவும்.

5 
தேசிய அரண்மனையின் படத்தைப் படச்சட்டகத்திற்குள் செருகவும்.

6 
தேசிய அரண்மனைப் படச் சட்டகம் தயார்.

ஆசிரியர் குறிப்பு: தேசிய அரண்மனைப் படச் சட்டத்தைச் செய்ய மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## மீட்டுணர்வோம்



**நாட்டின் முகாமைத் தலைவர்**

- இவர் நாட்டின் உயரிய தலைவர்.
- இவர் அதிகாரம், சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய துறைகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

**அரசர் மன்றம்**



- அரசர் மன்றம் என்பது ஒன்பது மலாய் அரசரையும் நான்கு மாநில ஆளுநரையும் கொண்ட ஓர் அமைப்பாகும்.
- மாமன்னரைத் தேர்ந்தெடுப்பதில் அரசர் மன்றம் முக்கியப் பங்காற்றுகின்றது.

**மாட்சிமை தாங்கிய மாமன்னரின் முடிசூட்டு விழா**

- தேர்ந்தெடுக்கப்படும் மாட்சிமை தாங்கிய மாமன்னர் முடிசூட்டு விழாவின்வழி பிரகடனப்படுத்தப்படுவார்.
- மாட்சிமை தாங்கிய மாமன்னர் பதவி உறுதிமொழி எடுத்துக் கையெழுத்திடுவார்.





**மாட்சிமை தாங்கிய மாமன்னரின் அதிகாரம்**

- இஸ்லாமியத் தலைவர்.
- மலாய்க்காரர்கள், பூமிபுத்ராக்களின் சிறப்பு நிலையைப் பாதுகாத்தல்.
- மலேசியக் குடிமக்களான பிற இனங்களின் முறையான நலன்களைப் பாதுகாத்தல்.
- நாடாளுமன்றத்தைக் கூட்டுதல், ஒத்தி வைத்தல், களைத்தல்.
- மலேசிய இராணுவப் படையின் உயர் ஆணையாளர்.
- பிரதமரையும் அமைச்சரவை உறுப்பினர்களையும் நியமித்தல்.
- சட்ட மசோதாவை அங்கீகரித்தல்.
- நாட்டின் பெருமைக்குரிய விருதுகளை வழங்குதல்.

**மாட்சிமை தாங்கிய மாமன்னரின் அரசுரிமைச் சின்னங்கள்**

- மாட்சிமை தாங்கிய மாமன்னராலும் பேரரசியாராலும் அரசுரிமைச் சின்னங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- அரச வைபவ உடைகளும் அரசுரிமைச் சின்னங்களும் அடங்கும்.



இவ்வலகு மாட்சிமை தாங்கிய மாமன்னரின் இறையாண்மை பற்றிய புரிதலை அளிக்கிறது. அடுத்த அலகில் தேசிய அடையாளமான தேசியச் சின்னத்தைப் பற்றி நாம் விவாதிக்க உள்ளோம்.

## சிந்தித்துப் பதிலளி


**அ. கோடிட்ட இடத்தை நிரப்புக.**



| ஆட்சிமுறையை | அரசமைப்பு | சமநீதியும் | ஆணையாளர் | நான்கு |
|---|---|---|---|---|

1. மலேசியா மன்னர் ______________ அமல்படுத்துகிறது.
2. ______________ மாநில ஆளுநர்கள் அரசர்கள் மன்றத்தின் உறுப்பினர்கள் ஆவர்.
3. மாட்சிமை தாங்கிய மாமன்னர் மலேசிய இராணுவப் படையின் _________
4. நாடு சுதந்திரம் பெற்றதும் மாட்சிமை தாங்கிய மாமன்னர் ______________ அமைப்பு முறை உருவாக்கப்பட்டது.
5. ______________ நடுநிலைமையும் நிறைந்த ஆட்சி புரிய மாட்சிமை தாங்கிய மாமன்னர் உறுதி மொழி ஏற்கிறார்.

**ஆ. கீழ்க்காணும் அரச வைபவ உடைகளையும் அரசுரிமைச் சின்னங்களையும் குறிப்பிடுக.**





ஆசிரியர் குறிப்பு இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.

# நாட்டை நேசிப்போம்

வெண்கொற்றக் குடையாகத் திகழும் மாட்சிமை தாங்கிய மாமன்னர் அரசமைப்பு முறையைக் கண்டு நாம் பெருமைப்பட வேண்டும்.



(மூலம்: Istana Negara)



அலகு 8

# தேசியச் சின்னம்

## சாரம்

மலேசிய அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வச் சின்னமாகத் தேசியச் சின்னம் விளங்குகின்றது. நம் நாட்டின் அடையாளங்களின் ஒன்றான தேசியச் சின்னத்தின் பொருளை விளங்கிக் கொள்ளவும் உய்த்துணரவும் அவசியம் கற்க வேண்டும். இந்த அலகில் தேசியச் சின்னத்தின் வரலாற்றையும் அவற்றில் காணப்படும் அடையாளங்களையும் அதன் பொருளைப் பற்றியும் விவாதிக்க உள்ளோம்.




(மூலம்: Warta Kerajaan Malaysia, 20 September 1990)

## நீங்கள் கற்கப் போவது என்ன?


1. தேசியச் சின்னத்தின் வரலாறு.
2. தேசியச் சின்னத்தின் அடையாளங்கள்.
3. தேசியச் சின்னத்தின் பொருள்.

## அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத் திறன்

1. தேசியச் சின்னத்தின் வரலாற்றையும் அதன் காலநிரலையும் புரிந்து கொள்ளுதல்.
2. தேசிய அடையாளத்தை மதிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க கடந்த காலச்சிக்கல்களைப் புரிந்து கொள்ளுதல்.

**குடியியல் நெறி**

மதித்தல்
பொறுப்புணர்வு










சில அடையாள ஆவணங்களில் தேசியச் சின்னம்.
(மூலம்: Koleksi peribadi Ahmad Hishanuddin bin Ramli)

## தேசியச் சின்னத்தை அறிவோம்

ஒவ்வொரு நாட்டிற்கும் தனி தேசியச் **சின்னம்** இருக்கும். மலேசியாவின் அதிகாரப்பூர்வ, இறையாண்மைச் சின்னமாகத் தேசியச் சின்னம் திகழ்கிறது. மலேசியர்களின் ஒற்றுமை, பெருமை, அடையாளம் ஆகியவற்றைத் தேசியச் சின்னம் பிரதிபலிக்கின்றது.




**சொற்களஞ்சியம்**

**சின்னம்**: நாடு அல்லது மாநில மாண்பின் அடையாளம்.

**விரைந்து பதிலளி**

நாம் ஏன் தேசியச் சின்னத்தை மதிக்க வேண்டும்?




**உங்களுக்குத் தெரியுமா?**

மத்திய அரசின் நிர்வாக மையமாகப் புத்ரா ஜெயா கூட்டரசுப் பிரதேசம் திகழ்கிறது.


9.1.1
K9.1.4

ஆசிரியர் குறிப்பு

தேசியச் சின்னத்தை மதிப்பதன் அவசியத்தை மாணவர்கள் கூறுவதற்கு வழிகாட்டுதல்.


## தேசியச் சின்னத்தின் வரலாறு

மலாய் அரசர்களால் அங்கீகரிக்கப்பட்ட தேசியச் சின்னம் மலேசியர்களின் பெருமைக்குரியதாகும். தேசியச் சின்னம் காலப் போக்கில் சில மாற்றங்களைக் கண்டு வந்துள்ளது.




1 நீயும் புத்ரா ஜெயா சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்டது மகிழ்ச்சியே. அரசுக் கட்டடங்களில் தேசியச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும் என நான் கேள்விப்பட்டதுண்டு. தேசியச் சின்னத்தின் வரலாறுதான் என்ன?

2 மிக்க மகிழ்ச்சி ஸ்டப்பனி. இந்த நூலில் குறிப்பிடப்பட்டதுபோல 1948ஆம் ஆண்டில் தேசியச் சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஐந்து கிரீஸ், பினாங்கு, மலாக்கா மாநிலங்களின் சின்னங்களும் நான்கு கட்டங்களில் வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், ஆகிய நிறங்களும் ஒரு போர்க் கேடயத்தில் பொருத்தப்பட்டு, அதனை இரண்டு புலிகள் தாங்கி நிற்பதாகவும் அமைந்திருக்கும். அக்கேடயத்தின் மேல்பகுதியில் மஞ்சள் நிறத்தில் ஒரு பிறையும் 11 முனைகள் கொண்ட நட்சத்திரமும் பொறிக்கப்பட்டிருக்கும். மேகப்பட்டையில் '**ஐக்கியம்** மேன்மையைத் தரும்' எனும் முழக்கவரி ஜாவியிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கும்.



**சொற்களஞ்சியம்**

**ஐக்கியம்**: பலத்தைப் பெருக்கிக் கொள்ள ஒருவர்க்கொருவர் ஒற்றுமையுடன் ஒன்றிணைதல்.
**இயல்பான**: நிதர்சனமான நிலையைக் காட்டுகிறது.




(மூலம்: Arkib Negara Malaysia, 2017. *Persekutuan Tanah Melayu 1948: Asas Negara Merdeka*. Kuala Lumpur: Arkib Negara Malaysia)

3 உண்மைதான் ஆல்யா. 1963ஆம் ஆண்டு மலேசியாவின் தோற்றத்திற்குப் பிறகு தேசியச் சின்னம் மாற்றம் கண்டது. சிங்கப்பூர், சபா, சரவாக் மாநிலங்களின் சின்னம் கேடயத்தின் கீழ்ப்பகுதியில் பொறிக்கப்பட்டிருக்கும். மலாக்கா மரம் மலாக்கா மாநிலத்தைப் பிரதிநிதிக்கிறது. ‘ஐக்கியம் மேன்மையைத் தரும்’ எனும் முழக்கவரி மலாய்மொழியில் மாற்றப்பட்டுள்ளது.

4 1965ஆம் ஆண்டு தேசியச் சின்னத்தில் மீண்டும் சிறு மாற்றம் செய்யப்பட்டது. சிங்கப்பூர் சின்னத்திற்குப் பதிலாகச் செம்பருத்தி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது நாம் காணும் தேசியச் சின்னத்தில் பினாங்கு மாநிலச் சின்னம் சீர்செய்யப்பட்டது. இரண்டு புலிகளின் தோற்றம் மிகவும் **இயல்பான** நிலையில் இருக்கும்படி மாற்றப்பட்டது. சபா, சரவாக் ஆகிய மாநிலங்களின் சின்னம் மாற்றம் கண்டது. பதினான்கு முனை நட்சத்திரம், பிறை, ஐந்து கிரீஸ், மலாக்கா மரம், வெள்ளை, சிவப்பு, கருப்பு, மஞ்சள் ஆகிய நான்கு நிறக் கட்டங்களும் முழக்கவரியும் நிலைநிறுத்தப்பட்டன.



**விரைந்து பதிலளி**

ஏன் தேசியச் சின்னம் 1963ஆம் ஆண்டில் மாற்றம் கண்டது?

தேசியச் சின்னம் என்பது மாண்பின் அடையாளமாகும். நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்க, தேசியச் சின்னத்தை நாம் மதிக்கவும் போற்றவும் வேண்டும்.

9.1.1
K9.1.4


ஆசிரியர் குறிப்பு: தேசியச் சின்னத்தைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ள வழிகாட்டுதல்.

## தேசியச் சின்னத்தின் அடையாளமும் பொருளும்


தேசியச் சின்னம் நம் நாட்டின் அடையாளமாகும். மலேசியர்களின் ஒற்றுமைக்கும் பெருமைக்கும் தேசியச் சின்னம் அடையாளமாகத் திகழ்கிறது. தேசியச் சின்னத்தில் இரண்டு புலிகள் ஒரு கேடயத்தைத் தாங்கி நிற்பது போல அமைந்திருக்கும். இந்த வடிவமைப்பில் வேறு சில சின்னங்களும் உள்ளன. ஒவ்வொரு சின்னத்திற்கும் வண்ணத்திற்கும் ஏற்பத் தனிப்பொருள் உண்டு.




14 முனைகள் கொண்ட நட்சத்திரம் மலேசியாவின் 13 மாநிலங்களையும் கூட்டரசுப் பிரதேசத்தின் ஒற்றுமையையும் குறிக்கின்றது. பிறை, நட்சத்திரச் சின்னங்கள் கூட்டரசு மலேசியாவின் சமயமான இஸ்லாத்தைத் குறிக்கிறது.



வீரத்தின் அடையாளமாக இரண்டு புலிகள்.




ஐந்து கிரீஸ்கள் முன்பு ஐக்கியப் படாத மலாய் மாநிலங்கள் என அறியப்பட்ட பெர்லிஸ், கெடா, கிளந்தான், திரங்கானு, ஜொகூர் ஆகிய மாநிலங்களைக் குறிக்கின்றன.




கேடயத்தின் நடுவில் காணப்படும் நான்கு வண்ணங்கள் ஐக்கிய மலாய் மாநிலங்களைக் குறிக்கின்றன. சிவப்பு, மஞ்சள் வண்ணம் சிலாங்கூர் மாநிலத்தையும் கருப்பு, வெள்ளை வண்ணம் பகாங் மாநிலத்தையும் கருப்பு, வெள்ளை, மஞ்சள் வண்ணம் பேராக் மாநிலத்தையும் சிவப்பு, கருப்பு, மஞ்சள் வண்ணம் நெகிரி செம்பிலான் மாநிலத்தையும் குறிக்கின்றன.

**விரைந்து பதிலளி**


தேசியச் சின்னத்தில் காணப்படும் இரண்டு புலிகள் எதனைக் குறிக்கின்றன?



கேடயத்தின் இடது புறத்தில் இருக்கும் பாக்கு மரமும் பாலமும் பினாங்கு மாநிலத்தைக் குறிக்கிறது.



கேடயத்தின் வலது புறத்தில் இருக்கும் மலாக்கா மரம், மலாக்கா மாநிலத்தைக் குறிக்கிறது.



சரவாக், சபா மாநிலச் சின்னம் கேடயத்தில் பொறிக்கப்பட்டிருக்கும். அச்சின்னங்களின் நடுவில் உள்ள செம்பருத்தி நம் நாட்டின் தேசிய மலரைக் குறிக்கிறது.




‘ஐக்கியம் மேன்மையைத் தரும்’ என்னும் முழக்கவரி குடிமக்களிடையே ஒருமைப்பாட்டு உணர்வை ஏற்படுத்துவதோடு ஒற்றுமையை வலுவடையச் செய்கிறது.

நாட்டின் அடையாளமான தேசியச் சின்னத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

**நடவடிக்கை**

குழுவாரியாக, மணிலா அட்டையில் உங்கள் குழுவின் சின்னத்தை வரையவும். அச்சின்னத்தில் வண்ணமும் சொந்த முழக்கவரியும் இருக்க வேண்டும். குழுவின் சின்னத்தைப் படைப்பாற்றலோடு படைத்திடுக.

தேசியச் சின்னத்தில் காணப்படும் ஒவ்வோர் அடையாளமும் வண்ணமும் தனிப்பொருளைக் குறிக்கிறது. இந்த அடையாளமானது தேசியச் சின்னத்தைத் தனித்துவமாகவும் பொருள் பொதிந்ததாகவும் காட்டுகிறது.

9.1.2
9.1.3
K9.1.5

ஆசிரியர் குறிப்பு: தேசியச் சின்னத்தில் காணப்படும் அடையாளங்களையும் பொருளையும் அறிந்து கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## ஐக்கியம் மேன்மையைத் தரும்

தேசியச் சின்னத்தில் காணப்படும் முழக்கவரி ரோமன், ஜாவி ஆகிய எழுத்துகளில் எழுதப்பட்டிருக்கும். 'ஐக்கியம் மேன்மையைத் தரும்' எனும் முழக்கவரி மலேசியர்களுக்குப் பொருள்பொதிந்ததாக அமைந்துள்ளது. இந்த முழக்கவரியானது மேம்புகழும் வளமும் கொண்ட மலேசிய நாட்டை உருவாக்க மக்களிடையே ஒத்துழைப்பும் ஒருமைப்பாடும் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றது. மலேசியா மக்களாகிய நாம், தேசியச் சின்னத்தின் முழக்கவரியை உய்த்துணர்ந்து பின்பற்ற வேண்டும்.

### நடவடிக்கை




இப்படம் தேசியச் சின்னத்தில் காணப்படும் முழக்கவரியைக் காட்டுகிறது.

குழுவாரியாக முழக்கவரியை ஆராய்க.

1. தேசியச் சின்னத்தை உய்த்துணர்ந்து பின்பற்றுவதற்கான அவசியத்தை பல்வேறு மூலங்களின்வழி குறிப்புகளைத் திரட்டுக.
2. திரட்டப்பட்ட குறிப்புகளைப் படைப்பாக்கத்துடன் தாள் அல்லது பல்லூடகங்களில் குறிப்பிடுக.
3. குழுவில் கிடைக்கப் பெற்ற தகவல்களைப் படைத்திடுக.

தேசியச் சின்னத்திலுள்ள அடையாளங்களின் பொருளை விளங்கிக் கொண்டும் உய்த்துணர்ந்தும் நம் அன்றாட வாழ்வில் பின்பற்ற வேண்டும். தேசியச் சின்னத்தின் முழக்கவரிகளை உய்த்துணர்வதன் மூலம் மக்களிடையே நல்லிணக்கத்தை மேலோங்கச் செய்ய முடியும்.

9.1.3
K9.1.6

## மீட்டுணர்வோம்

### தேசியச் சின்னத்தை அறிவோம்

- மலேசிய அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ சின்னம்
- நாட்டின் அடையாளம்
- இறையாண்மைச் சின்னம்
- ஒற்றுமையின் சின்னம்




### தேசியச் சின்னத்தின் வரலாறு



1948



1963



1965



இன்று

### தேசியச் சின்னத்தின் அடையாளமும் அதன் பொருளும்


- ஒவ்வொரு சின்னத்திற்கும் வண்ணத்திற்கும் அதன் தனிப் பொருள் உண்டு.



13 மாநிலங்களுடன் கூட்டரசுப் பிரதேசத்தின் ஒற்றுமையையும் இஸ்லாம் கூட்டரசு மலேசியாவின் சமயம் என்பதையும் குறிக்கின்றது.



ஐந்து கிரீஸ், ஐக்கிய படாத ஐந்து மலாய் மாநிலங்களைக் குறிக்கின்றன.



நான்கு வண்ணங்கள் ஐக்கிய மலாய் மாநிலங்களைக் குறிக்கின்றன.




புலி வீரத்தின் அடையாளம்



பினாங்கு மாநிலத்தைக் குறிக்கிறது.



மலாக்கா மாநிலத்தைக் குறிக்கிறது.



சபா, சரவாக்கையும் தேசிய மலரையும் குறிக்கிறது.



‘ஐக்கியம் மேன்மையைத் தரும்’ எனும் முழக்கவரி

தேசியச் சின்னத்தின் வரலாற்றையும் அதன் அவசியத்தையும் புரிந்து கொள்ள இந்த அலகு உதவுகிறது. அடுத்த அலகில் மாணவர்கள் தேசியக் கொடியின் வரலாற்றையும் அதன் அவசியத்தையும் புரிந்துகொள்வர்.

## சிந்தித்துப் பதிலளி

தேசியச் சின்னத்தை அச்சிட்டு வரைந்து கேள்விகளுக்கு விடையளித்திடுக.




1. -------------------- தேசியச் சின்னத்தைக் காணலாம்.
   அ) அரசாங்கக் கட்டடங்களில்
   ஆ) வீடுகளில்
   இ) பேரங்காடியில்

2. மஞ்சள் நிறத்திலான பிறை, நட்சத்திரச் சின்னங்களின் பொருள் -----------
   அ) மலேசியக் கூட்டரசுச் சமயம் இஸ்லாம்
   ஆ) மக்களிடையே ஒருமித்த கருத்து
   இ) வீரத்தைக் குறிக்கின்றது

3. செம்பருத்தி ------------- குறிக்கிறது.
   அ) ஒற்றுமை மலரைக்
   ஆ) அரசாங்க மலரைக்
   இ) தேசிய மலரைக்

4. ………………… என்பது தேசியச் சின்னத்தின் முழக்கவரி ஆகும்.
   அ) 'ஒருமைப்பாட்டின் நன்மைக்கு வித்திடும்'
   ஆ) 'தயார்நிலை, சேவை, அர்ப்பணிப்பு'
   இ) 'ஐக்கியம் மேன்மையைத் தரும்'

5. எதற்காக நாம் தேசியச் சின்னத்தைக் கண்டு பெருமை கொள்ள வேண்டும்?
   அ) மாண்பின் சின்னம்
   ஆ இணக்கத்தின் சின்னம்
   இ) விசுவாசத்தின் சின்னம்

# நாட்டை நேசிப்போம்

தேசியச் சின்னத்தின் அவசியத்தை அறிந்து, அதனை உய்த்துணர்வதன்வழி நாம் ஒற்றுமைமிகு சமுதாயத்தை உருவாக்குவதோடு நல்வழிக்கும் இட்டுச் செல்லலாம். தேசியச் சின்னத்தை எண்ணி நாம் பெருமைப்பட வேண்டும்.



ஒற்றுமை சிறந்த சமுதாயத்தை உருவாக்கும்.

(மூலம்: Koleksi peribadi Ahmad Hishanuddin bin Ramli)



அலகு 9

# மலேசியத் தேசியக் கொடி






தேசியக் கொடியைப் பறக்கவிடுவது மலேசிய மக்களின் பெருமையைப் பிரதிபலிக்கிறது.

(மூலம்: Persekutuan Kebangsaan Berbasikal Malaysia, Noor Emy Liana binti Daud, Muslim bin Haji Tamsir, Danish Irfan bin Muslim)

## சாரம்

தேசியக் கொடி ஒவ்வொரு நாட்டின் பெருமைமிகு சின்னமாக விளங்குகிறது. தேசியக் கொடியின் அடையாளத்தை அறிந்து புரிந்து கொள்வது நாட்டின் மீது பெருமை உணர்வை ஏற்படுத்தும். இந்த அலகு வரலாறு, பெயர், வண்ணத்தின் பொருள், சின்னம், தேசியக் கொடியை ஏற்றும்போதும் இறக்கும்போதும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை விவரிக்கின்றது.

## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. தேசியக் கொடியின் வரலாறு.
2. தேசியக் கொடியின் பெயர்.
3. தேசியக் கொடியின் வண்ணமும் சின்னத்தின் பொருளும்.
4. தேசியக் கொடி பயன்பாட்டின் நெறிமுறைகள்.



**குடியியல் நெறி**

பொறுப்புணர்வு

## AKPS அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத் திறன்

1. தேசியக் கொடி வரலாற்றின் ஆதாரத்தை ஆராய்தல்.
2. தேசியக் கொடியின் வண்ணத்தின் பொருளையும் சின்னத்தின் பொருளையும் படைப்பாக்கத்தோடு விரிவாக்கம் செய்தல்.
3. தேசியக் கொடி பயன்பாட்டின் நெறிமுறைகள் பற்றிய காட்சியைக் கற்பனை செய்தல்.

## நம் நாட்டுக் கொடியின் வரலாறு

தேசியக் கொடி ஒரு நாட்டின் உருவாக்கத்திற்கும் அடையாளத்திற்கும் சின்னமாகத் திகழ்கிறது. தேசியக் கொடி இன, சமய பாகுபாடின்றித் தனிநபர் ஒற்றுமையின் அடையாளமாகத் திகழ்கிறது. நாட்டுப்பற்று நிறைந்த குடிமக்களான நாம் தேசியக் கொடியின் வடிவாக்க வரலாற்றைத் தெரிந்து புரிந்து கொள்ள வேண்டும்.

**1**

1948ஆம் ஆண்டு கூட்டரசு ஆட்சிமன்றம் கூட்டரசு மலாயாவின் கொடியை வடிவமைக்கும் போட்டியை ஏற்பாடு செய்தது.

**2**

1949ஆம் ஆண்டு 'தி மெலெ மெயில்' பத்திரிகையில் இறுதி முடிவு அறிவிக்கப்பட்டது. கொடியின் மூன்று வடிவமைப்பு இறுதிச்சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

**3**



**இஞ்சே முகமது பின் ஹம்சா வடிவமைத்த கொடி**

- ஜொகூர் மாநிலப் பொதுப்பணித் துறையின் கட்டட வடிவமைப்பாளரான இஞ்சே முகமது பின் ஹம்சாவின் படைப்பு மிகச் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- நீலம், வெள்ளை வண்ணங்கள் கொண்ட பதினொரு பட்டைகளைக் கொண்டுள்ளது.
- பிறையும் ஐந்து முனைகள் கொண்ட நட்சத்திரமும் உள்ளன.

இஞ்சே முகமது பின் ஹம்சா 1918 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் ஐந்தாம் நாள் சிங்கப்பூரில் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை ஜொகூர் பாரு ஆங்கிலக் கல்லூரியில் பயின்றார். இவர் 1993ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் பத்தொன்பதாம் நாள் இயற்கை எய்தினார்.




**உங்களுக்குத் தெரியுமா?**

கூட்டரசு மலாயா கொடியின் வடிவமைப்புப் போட்டியில் மொத்தம் 373 பேர் பங்கேற்றனர்.

**விரைந்து பதிலளி**

கூட்டரசு மலாயாவின் கொடியை வடிவமைத்தவர் யார்?


4



**மாற்றம் கண்ட வடிவமைப்பு**

- இஞ்சே முகமது பின் ஹம்சா வடிவமைத்த கொடியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன.
- நீல பட்டைகள் சிவப்புப் பட்டைகளாக மாற்றப்பட்டன.
- சிவப்பு, வெள்ளை வண்ணங்கள் கொண்ட பதினொரு பட்டைகளைக் கொண்டுள்ளது.


5



**1950ஆம் ஆண்டின் கூட்டரசு மலாயாவின் கொடி**

- ஏப்ரல் 1950ஆம் ஆண்டு கூட்டரசு மலாயாவின் கொடி கூட்டரசு ஆட்சிமன்ற ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- பதினொரு பட்டை உள்ளன.
- பதினொரு முனை நட்சத்திரம் உள்ளது.

6



**1963ஆம் ஆண்டிலிருந்து மலேசியக் கொடி**

- 26 மே 1950ஆம் நாள் கூட்டரசு மலாயாவின் கொடி முதன்முறையாக சிலாங்கூர் சுல்தான் அரண்மனை வளாகத்தில் பறக்கவிடப்பட்டது.
- 16 செப்டம்பர் 1963ஆம் நாள் தேசியக் கொடி 14 பட்டையைக் கொண்டுள்ளது.
- 14 முனை நட்சத்திரம் உள்ளது.

(மூலம்: Jabatan Penerangan Malaysia, Kementerian Komunikasi dan Multimedia Malaysia)

தேசியக் கொடியின் வடிவமைப்பையும் வரலாற்றையும் காலநிரலையும் அறிந்து கொள்வதால் முன்னாள் தலைவர்களின் படைப்பாக்கத்தையும் முயற்சியையும் பாராட்ட இயலும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இஸ்லாமிய சமயம், அரசர், ஒற்றுமை ஆகியவற்றைக் குறிக்கும் கூறுகளை அடையாளமாகக் கொண்டதால் இஞ்சே முகமது பின் ஹம்சா அவர்களின் வடிவமைப்பு தேர்ந்தெடுக்கக் காரணமாக அமைந்தது.


**நடவடிக்கை**

இஞ்சே முகமது பின் ஹம்சா வடிவமைத்த தேசியக் கொடியையும் 1963ஆம் ஆண்டில் மலேசியா தோற்றம் கண்ட பிறகும் உள்ள கொடியையும் ஒப்பிடுக.

9.2.1

## ‘ஜாலூர் கெமிலாங்’ நமது கொடி

நாட்டின் அடையாளச் சின்னமாக விளங்கும் தேசியக் கொடி நமது பெருமைக்குரியதாகும். நாம் தேசியக் கொடியின் பெயரையும் அதன் பொருளையும் தெரிந்து புரிந்து கொள்ள வேண்டும்.




**விரைந்து பதிலளி**

நமது தேசியக் கொடி எப்பொழுது ‘ஜாலூர் கெமிலாங்’ எனப் பெயரிடப்பட்டது?

**5** ‘கெமிலாங்’ என்றால் ஒளிரும் அல்லது மேம்புகழ் எனப் பொருள்படும். மாணவர்களாகிய நாம் முறையாகக் கல்வி கற்று நாட்டை முன்னேற்ற முனைப்புடன் செயல்பட வேண்டும்.

நாம் எங்கிருந்தாலும் நமது தேசியக் கொடியைப் பெருமிதமாகப் பறக்கவிட வேண்டும்.

**6** உண்மைதான் ஆச்சோங். நம் நாட்டின் மீது நேசத்தையும் நன்றியையும் வெளிப்படுத்த தேசியக் கொடியைப் பறக்கவிடலாம்.

*ஜாலூர் கெமிலாங் பாடல்*



## JALUR GEMILANG

Merahmu bara semangat waja
Putihmu bersih budi pekerti
Kuning berdaulat payung negara
Biru perpaduan kami semua

Puncak dunia telah kautawan
Lautan luas telah kauredah
Membawa semangat jiwa merdeka
Semarak jaya kami warganya

Empat belas melintang jalurnya
Semua negeri dalam Malaysia
Satu suara satu semangat
Itu sumpah warga berdaulat

Jalur Gemilang ...
di bawah naunganmu
Jalur Gemilang ...
kami semua bersatu
Perpaduan ketaatan
Amalan murni rakyat Malaysia

Jalur Gemilang ...
megah kami terasa
Jalur Gemilang ...
kibarkanlah wawasan
Merah putih biru kuning
Jalur semangat kami semua

Berkibarlah
Berkibarlah
Berkibarlah
Jalur Gemilang!

Lagu: Suhaimi Mohd Zain
Lirik: Syed Indera Syed Omar

‘ஜாலூர் கெமிலாங்’ என்பது தேசியக் கொடியின் பெயராகும். ‘ஜாலூர் கெமிலாங்கை’ பெருமைப்படுத்துவதும் உயர்வுபடுத்துவதும் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

**தேசியக் கொடியைப் பறக்கவிடுவதன் முக்கியத்துவம் என்ன?**

**நடவடிக்கை**

‘ஜாலூர் கெமிலாங்’ பாடலை எழுச்சியுடன் பாடி மலேசியத் தேசியக் கொடியைப் பறக்க விடுதல்.

9.2.2
K9.2.5

ஆசிரியர் குறிப்பு

- ‘ஜாலூர் கெமிலாங்’ பறக்கவிடுவதற்கான முக்கியத்துவத்தை மாணவர்கள் புரிந்து கொள்ள வழிகாட்டுதல்.
- ‘ஜாலூர் கெமிலாங்’ பாடலை எழுச்சியுடன் பாட மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## 'ஜாலூர் கெமிலாங்' அடையாளத்தை அறிவோம்

ஒவ்வொரு வண்ணத்திற்கும் அடையாளத்திற்கும் தனிப்பட்ட பொருண்மை உண்டு. நாட்டை நேசிக்கும் குடிமக்களாகிய நாம் தேசியக் கொடியின் பொருளை விளங்கி, உய்த்துணர்ந்து மரியாதை செலுத்த வேண்டும்.

**மஞ்சள் நிறம்**

- அரசருக்கும் நாட்டுக்கும் செலுத்தும் விசுவாசத்தை வெளிப்படுத்துவதைக் காட்டுகிறது.
- அரசியலமைப்பின் இறையாண்மையைக் காட்டுகிறது.

**நீல நிறம்**


- பல்லின மக்களின் ஒற்றுமையைக் காட்டுகிறது.
- ஒற்றுமையுடன் பொருளாதாரத்தை மேம்படுத்தப் பாடுபடுதல்.

**வெள்ளை நிறம்**

- உளத்தூய்மையையும் நேர்மையையும் காட்டுகிறது.
- கண்ணியம் நிறைந்த மலேசிய மக்களின் திடத்தன்மையை மேம்படுத்தும் ஆர்வத்தைக் காட்டுகிறது.

**சிவப்பு நிறம்**

- சவால்களை எதிர்கொள்ளும் மக்களின் துணிவையும் விடாமுயற்சியையும் காட்டுகிறது.



**பிறை**

- கூட்டரசு மலேசியாவின் சமயம் இஸ்லாம் என்பதைக் காட்டுகிறது.

**14 முனை நட்சத்திரமும் 14 பட்டையும்**

- 13 மாநிலத்தையும் ஒரு கூட்டரசுப் பிரதேசத்தின் ஒற்றுமையையும் காட்டுகிறது.

தேசியக் கொடியின் பொருளையும் சின்னத்தையும் உய்த்துணர்வது நம்மை நல்லிணக்கத்திற்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் உரிய பொறுப்புள்ள குடிமக்களாக்கும்.

**விரைந்து பதிலளி**

தேசியக் கொடியில் காணப்படும் பிறையின் பொருள் என்ன?


ஆசிரியர் குறிப்பு: தேசியக் கொடியின் பொருளையும் சின்னத்தையும் மாணவர்கள் புரிந்துகொள்ள வழிகாட்டுதல்.

9.2.3

## உருவாக்குவோம் வாரீர்


# அச்சுப்பதிப்புத் தேசியக் கொடி

### கருவிகளும் பொருள்களும்


வரையப்பட்ட தேசியக் கொடி


நீர் வண்ணம்


குச்சி


காது துடைப்பான் பஞ்சு


வண்ணக் கலவைத் தட்டு



பசை

### செய்முறை:

1


காது துடைப்பான் பஞ்சைக் கொண்டு வரையப்பட்ட தேசியக் கொடிக்கு வண்ணமிடுதல்.

2


வண்ணமிடப்பட்ட படத்தில் குச்சியை ஒட்டுதல்.


3


முழுமை பெற்ற அச்சுப்பதிப்பு தேசியக் கொடி.


ஆசிரியர் குறிப்பு: நேர்த்தியான முறையில் தேசியக் கொடி அச்சுப்பதிப்பை உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

# கொடியை மதிப்போம் நல்லிணக்கம் வளர்ப்போம்

தேசியக் கொடி நாட்டின் மாண்பிற்கும் இறையாண்மைக்கும் அடையாளமாகத் திகழ்கிறது. தேசியக் கொடியைப் பறக்கவிடுவது எழுச்சிமிகு நாட்டுப்பற்றைத் தூண்டும். நாம் எப்பொழுதும் தேசியக் கொடியை மதிக்க வேண்டும். தேசியக் கொடியைப் பயன்படுத்தும்போது சில நெறிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.





தொங்கும் நிலையில் உள்ள தேசியக் கொடியில் பிறையும் நட்சத்திரமும் மேல்நோக்கியும் பட்டைகள் கீழிருந்து நீளவாக்காகவும் இருக்க வேண்டும்.



சுவரில் வரையப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் தேசியக் கொடியில் பிறையும் நட்சத்திரமும் முன்புறம் இருந்து பார்க்கும்பொழுது இடப்பக்கமாக இருக்க வேண்டும்.

மேடையின் பின்திரையில் பேசுபவருக்குப் பின்புறமாகத் தேசியக் கொடியை உயர்ந்த இடத்தில் வைக்க வேண்டும்.





ஒரு வரிசையில் அணிவகுத்துச் சென்றால், தேசியக் கொடி மற்ற எல்லா கொடிகளுக்கும் முன்னணியில் இருக்க வேண்டும்.


(மூலம்: Jabatan Penerangan Malaysia, Kementerian Komunikasi dan Multimedia Malaysia, 2017)

நாம் ஏன் நம் தேசியக் கொடியை மதிக்க வேண்டும்?

9.2.4
K9.2.6

## தேசியக் கொடியை ஏற்றும்போதும் இறக்கும்போதும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்

தேசியக் கொடியைப் பயன்படுத்தும்போது சில **நெறிமுறைகளைப்** பின்பற்றாதவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்படுவர். தேசியக் கொடியை ஏற்றும்போதும் இறக்கும்போதும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைத் தெரிந்து மக்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்.



1. நேர்த்தியான உடை அணிந்திருக்க வேண்டும்.
2. கொடி தரையில் படாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
3. கொடி நல்ல நிலையில் இருப்பதை உறுதிச் செய்ய வேண்டும்.
4. கொடிக் கயிறு உறுதியாகவும் எளிதில் அறுந்து விடாமல் இருப்பதையும் உறுதிச் செய்ய வேண்டும்.
5. கொடியை முறையாகவும் மெதுவாகவும் ஏற்றவும் இறக்கவும் வேண்டும்.
6. **துக்கத்தை** அனுசரிக்கும் விதமாகக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட நேர்ந்தால் முதலில் கொடியை முழுக்கம்பத்திற்கு ஏற்றிய பின்னரே அரைக்கம்பத்திற்கு இறக்க வேண்டும்.
7. கொடியைக் கீழே இறக்கும்போது தோளில் தாங்கிட வேண்டும்.





வெளிநாடுகளில் இருந்தாலும் தேசியக் கொடி ஒவ்வொரு குடிமக்களின் ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்குகிறது. தேசியக் கொடியை மதித்துப் பெருமிதம் கொள்ளும் வகையில் அதனைப் பயன்படுத்தும் நெறிமுறைகளை அறிந்து சரியான முறையில் சமுதாயம் அமல்படுத்த வேண்டும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

கிழிந்த அல்லது வெளுத்துப் போன கொடியை முறையாக மறைவான இடத்தில் எரித்திட வேண்டும்.

அரைக்கம்பக் கொடி

ஏன் தேசியக் கொடி ஒற்றுமையின் சின்னமாக விளங்குகிறது?

**நடவடிக்கை**

உன் பள்ளியில் தேசியக் கொடியை ஏற்றும் இறக்கும் முறையைப் போலச் செய்தல்வழி செய்து காட்டுக.

**சொற்களஞ்சியம்**


**நெறிமுறை**: கடைப்பிடிக்க வேண்டிய முறைகள்.
**துக்கம்**: அரசர் மறைவுக்கான சோகத்தின் அனுசரிப்பின் அடையாளம்.

9.2.4
K9.2.7


ஆசிரியர் குறிப்பு: தேசியக் கொடியை ஏற்றும் இறக்கும் முறையைப் போலச் செய்தல்வழி செய்து காட்ட மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## தென்கிழக்காசிய நாடுகளின் தேசியக் கொடிகள்


தேசியக் கொடி என்பது சுதந்திர நாட்டின் அடையாளமாகும். உலக அமைதிக்காக நாம் பிற நாடுகளின் தேசியக் கொடிகள் பற்றி அவசியம் தெரிந்து கொள்ளவும் மதிக்கவும் வேண்டும்.


மலேசியா



தாய்லாந்து


சிங்கப்பூர்



இந்தோனேசியா


மியன்மார்


புருணை டாருஸ்சலாம்


கம்போடியா


தீமோர் லெஸ்தே


லாவோஸ்


வியட்நாம்


பிலிப்பைன்ஸ்

பிறநாடுகளின் தேசியக் கொடியை அறிந்து கொண்டால் உலகளாவிய நிலையில் பொது அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

21ஆம் நூற்றாண்டுக் கற்றல் திறன்

**குழுப் பணி**

1. மாணவர்களைப் பல குழுக்களாகப் பிரித்தல்.
2. ஒவ்வொரு குழுவும் தாங்கள் தயாரித்த கொடிக்குப் பெயரிட்டு, அதன் சின்னங்களின் பொருளை விளக்குதல்.
3. குழுவின் முடிவுகளை வகுப்பில் படைத்தல்.

ஆசிரியர் குறிப்பு: கொடியையும் குழுவின் பெயரையும் மாணவர்கள் உருவாக்க வழிகாட்டுதல்.

## மீட்டுணர்வோம்




**நம் நாட்டுக் கொடியின் வரலாறு**

வடிவமைப்பு செய்தவர் இஞ்சே முகமது பின் ஹம்சா. 1950ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாள் சிலாங்கூர் சுல்தான் அரண்மனை வளாகத்தில் முதன்முறையாகத் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டது.

**‘ஜாலூர் கெமிலாங்’ நமது கொடி**

1997ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 31ஆம் நாள் 40வது சுதந்திர நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு மலேசியாவின் நான்காவது பிரதமரான துன் டாக்டர் மகாதீர் முகமது அவர்களால் ‘ஜாலூர் கெமிலாங்’ என அறிவிக்கப்பட்டது.

**‘ஜாலூர் கெமிலாங்கின்’ அடையாளத்தை அறிவோம்**



| | | |
|---|---|---|
| சிவப்பு | - | துணிவும் விடாமுயற்சியும் |
| வெள்ளை | - | உளத்தூய்மையும் நேர்மையும் |
| மஞ்சள் | - | அரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல் |
| நீலம் | - | மக்கள் ஒற்றுமை |
| பிறை | - | கூட்டரசு மலேசியாவின் சமயம் இஸ்லாம் |
| 14 முனை நட்சத்திரம் | - | 13 மாநிலமும் ஒரு கூட்டரசு பிரதேசத்தின் ஒற்றுமையும் |

**கொடியை மதிப்போம் நல்லிணக்கம் வளர்ப்போம்**

காட்சிக்கு வைக்கப்படும் தேசியக் கொடி சரியான நிலையில் உள்ளதை உறுதிச் செய்ய வேண்டும். கொடியை ஏற்றும்போதும் இறக்கும்போதும் நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**தென்கிழக்காசிய நாடுகளின் தேசியக் கொடிகள்**


உலகளாவிய அமைதிக்காக நாம் பிற நாடுகளின் தேசியக் கொடிகளை அவசியம் மதிக்க வேண்டும்.




இந்த அலகு, ஒற்றுமையின் சின்னமாக விளங்கும் தேசியக் கொடியின் முக்கியத்துவத்தை விவரிக்கின்றது. அடுத்த அலகில் நாம் தேசியப் பண்ணைக் கற்றுப் புரிந்து கொள்ளப் போகிறோம்.

## சிந்தித்துப் பதிலளி

**அ. தேசியக் கொடியின் வண்ணத்தின் பொருளை எழுதுக.**




நீலம்:

சிவப்பு:

மஞ்சள்:

வெள்ளை:

**ஆ. தேசியக் கொடியின் பயன்பாட்டு நெறிமுறைகளைக் குறிப்பிடுக.**






**இ. தேசியக் கொடியைக் கருப்பொருளாகக் கொண்டு ஒரு கவிதையை இயற்றுக.**



ஆசிரியர் குறிப்பு இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.

# நாட்டை நேசிப்போம்

தேசியக் கொடியின் வரலாறு, பொருள், சின்னங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்வதால் நாட்டின் இறையாண்மையை அடையாளப்படுத்த முடியும். மலேசிய நாட்டிலும் உலகளாவிய நிலையிலும் 'ஜாலூர் கெமிலாங்' பறப்பதைக் கண்டு நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்.






'ஜாலூர் கெமிலாங்கைப்' பறக்கவிடுவதன்வழி மாணவர்களிடையே நாட்டுப்பற்றை மேலோங்கச் செய்யலாம்.
(மூலம்: Koleksi peribadi Hasfalila binti Hassan)

அலகு 10

# மலேசியத் தேசியப் பண்

## சாரம்

நம் நாட்டின் அடையாளத்தை அறிந்து கொள்வதற்காகத் தேசியப் பண்ணைக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த அலகு, தேசியப் பண்ணின் வரலாற்றையும் அதன் பெயரையும் விவாதிப்பதோடு பாடல் வரிகளையும் பொருளையும் விளக்குகிறது. மேலும், தேசியப் பண்ணைப் பாடும்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளையும் தனித்துவத்தை உருவாக்கும் தேசியப் பண்ணின் பங்கையும் விவரிக்கின்றது.



**குடியியல் நெறி**

பொறுப்புணர்வு
மதித்தல்

(மூலம்: Koleksi peribadi Hasfalila binti Hassan)

## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. தேசியப் பண் உருவான வரலாறு.
2. தேசியப் பண்ணின் பெயர்.
3. 'நெகாராகூ' பாடலின் வரிகளும் பொருளும்.
4. தேசியப் பண்ணைப் பாடும்போதும் கேட்கும்போதும் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள்.
5. தனித்துவத்தை உருவாக்குவதில் தேசியப் பண்ணின் பங்கு.

## AKPS அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத் திறன்

1. தேசியப் பண் உருவான வரலாற்றுச் சான்றுகளை ஆராய்தல்.
2. தேசியப் பண்ணின் வரியையும் அதன் பொருளையும் பற்றிய உணர்வைக் கற்பனை செய்தல்.
3. தேசியப் பண்ணைப் பாடும்போதும் கேட்கும்போதும் தோன்றும் காட்சியைக் கற்பனை செய்தல்.



தேசியப் பண்ணைப் பாடுவதன்வழி மாணவர்களுக்கிடையே நாட்டுப்பற்றையும் ஒற்றுமை உணர்வையும் வளர்க்கலாம்.

## தேசியப் பண்ணின் வரலாறு

'நெகாராகூ' நாட்டின் தேசியப் பண். தேசியப் பண் நாட்டின் இறையாண்மைக்கும் ஒற்றுமைக்கும் அடையாளமாக விளங்குகிறது. தேசியப் பண் உருவான வரலாறு 1957ஆம் ஆண்டு தொடங்கியது. நாட்டின் மீது விசுவாசம் கொண்ட குடிமக்களான நாம் தேசியப் பண்ணின் வரலாற்றைத் தெரிந்திருப்பது அவசியமாகும்.




**விரைந்து பதிலளி**

தேசியப் பண் எங்கு முதன்முறையாக ஒலிபரப்பப்பட்டது?

**நடவடிக்கை**

குழு முறையில், பல்வேறு மூலங்களைக் கொண்டு உங்கள் பள்ளிப் பாடல் வரலாற்றை ஆராய்க.

இருப்பினும் துங்கு அப்துல் ரஹ்மான் புத்ரா அல் ஹாஜ் அவர்களைத் தலைவராகக் கொண்ட பாடல் தேர்வுக் குழுவிற்குத் தேசியப் பண்ணுக்குப் பொருத்தமான பாடல் எதுவும் கிடைக்கவில்லை.

துங்கு அப்துல் ரஹ்மான் புத்ரா அல் ஹாஜ் அவர்கள் பேராக் மாநிலத்தின் அதிகாரப்பூர்வப் பாடலை தேசியப் பண்ணாகக் கொள்ளப் பரிந்துரைத்தார்.

பலர் அனுப்பியிருந்த கவிதைகளிலிருந்து சில வரிகளைக் கொண்டு தேர்வுக் குழு தேசியப் பண்ணின் வரிகளைச் சீர்செய்தது.

**Lagu kebangsaan: Perak bangga dengan pilehan**

Inche Hussein bin Noordin, setia-usaha Jawatankuasa Perikatan Perak: "Kami berasa bangga yang lagu kebangsaan negeri Perak telah di-pileh dari pada beberapa banyak gubahan yang di-hantar sa-bagai lagu kebangsaan bagi negeri kita yang merdeka."

Beberapa orang Keluarga di-raja Perak berkata bahwa sunggoh pun menjadi suatu kehormatan yang besar bagi negeri itu yang lagu kebangsaan-nya di-pileh bagi Malaya Merdeka, tetapi mereka enggan berpisah dengan-nya atas "sebab2 perasaan" dan kaitan-nya dengan sejarah negeri itu.

Sa-orang pegawai kanan kerajaan berkata bahwa soal lagu kebangsaan itu belom lagi di-bangkitkan pada pe-rengkat kerajaan.

(Sumber: Berita Harian, 7 Ogos 1957)

தேசியப் பண் முதன்முறையாக, 30 ஆகஸ்ட்டு 1957ஆம் நாள் இரவு தற்போது, 'மெர்டேக்கா சதுக்கம்' என்றழைக்கப்படும் பாடாங் கிளப் சிலாங்கூரில் ஒலிபரப்பப்பட்டது.

அன்றைய இரவில், 'நெகாராகூ' என்ற தேசியப் பண் முதன் முதலில் இசைக்கப்பட்டுக் கூட்டரசு மலாயாவின் கொடி ஏற்றப்பட்டது.



Bendera Persekutuan Tanah Melayu dinaikkan pada malam 30 Ogos 1957

அறிமுகம் இருந்தால்தான் நேசம் உருவாகும். ஆகவே, நம் நாட்டின் மீது பெருமிதமும் மதிப்பும் ஏற்பட நாம் தேசியப் பண்ணை உய்த்துணர வேண்டும்.

பேராக் மாநிலப் பண்

(மூலம்: Arkib Negara Malaysia, 2013. *Citra Merdeka 1957–2007.* Kuala Lumpur: Arkib Negara Malaysia)

தேசியப் பண்ணின் வரலாற்றை அறிந்து கொள்வதன்வழி நாட்டின் தலைவர்களின் விவேகத்தை எண்ணிப் பெருமிதம் கொள்ள முடியும்.

9.3.1
9.3.2
K9.3.7

ஆசிரியர் குறிப்பு: தேசியப் பண்ணின் வரலாற்றை மாணவர்கள் புரிந்து கொள்ளவும் பள்ளிப் பண்ணின் வரலாற்றை மாணவர்கள் ஆராயவும் வழிகாட்டுதல்.

## மலேசியாவின் தேசியப் பண் நெகாராகூ

ஒவ்வொரு நாட்டிற்கும் அடையாளமாகத் தேசியப் பண் திகழ்கிறது. பொதுவாக ஒவ்வொரு நாட்டுப் பண்ணுக்கும் அதிகாரப்பூர்வப் பெயர் உண்டு.




21ஆம் நூற்றாண்டுக் கற்றல் திறன்

**பாகமேற்று நடித்தல்**

மேற்கண்ட உரையாடலின் அடிப்படையில் நடித்துக் காட்டுக.

சொற்களஞ்சியம்

**நாட்டுப்பற்று**: நாட்டின் மீது ஆழ்ந்த அன்பு செலுத்துதல்.




கூட்டமாகத் தேசியப் பண்ணைப் பாடும்போது குடிமக்களிடையே **நாட்டுப்பற்று** எழுச்சியூட்டப்படுகிறது.

**விரைந்து பதிலளி**

நம் நாட்டின் தேசியப் பண்ணின் பெயர் என்ன?

தேசியப் பண் எவ்வாறு நாட்டுப்பற்றை எழுச்சியூட்டுவதாக்குகிறது?

9.3.2
K9.3.6
K9.3.7

ஆசிரியர் குறிப்பு: மாணவர்கள் நடிப்பதற்கு வழிகாட்டுதல்.

## தேசியப் பண்ணின் பொருளை உய்த்துணர்தல்

தேசியப் பண் நாட்டின் மீது மக்களின் நம்பிக்கையையும் வேட்கையையும் வெளிப்படுத்துகிறது. நாட்டின் மீது விசுவாசம் கொண்ட குடிமக்களான நாம் தேசியப் பண்ணின் வரிகளைப் புரிந்து கொள்ளுதலும் உய்த்துணர்தலும் அவசியமாகும்.

### *Negaraku*

Negaraku
Tanah tumpahnya darahku
Rakyat hidup
Bersatu dan maju

Rahmat bahagia
Tuhan kurniakan
Raja kita
Selamat bertakhta

Rahmat bahagia
Tuhan kurniakan
Raja kita
Selamat bertakhta

### நெகாராகூ பாடல் வரிகளின் பொருள்

பல்லினத்தையும் பல சமயத்தையும் சார்ந்த மக்கள் ஒன்றிணைந்து முன்னேற்றத்தை நோக்கிச் செல்லக் கோருதல்.

நாட்டையும் மக்களையும் சுபிட்சத்துடன் ஆட்சிபுரியும் அரசரின் நல்வாழ்விற்காக இறைவனின் ஆசியை வேண்டுதல்.



நாட்டிற்கும் அரசருக்கும் நாம் பிளவுபடாத விசுவாசத்தைக் காட்ட வேண்டும்.

நெகாராகூ பாடல்

**21ஆம் நூற்றாண்டுக் கற்றல் திறன்** — **சிந்தனை வரைபடம்**

1. 'நெகாராகூ' பாடல் வரிகளை உய்த்துணரும் அடிப்படையில், "மலேசியாவின் குடிமகன் என்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். காரணம்........" என்ற வாசகத்தைச் சிந்தனை வரைபடத்தின்வழி குறிப்பிடுக.
2. இடுபணியின் தகவல்களைப் படைத்திடுக.

**விரைந்து பதிலளி**

தேசியப் பண்ணின் நான்காவது வரியைக் குறிப்பிடுக.


நாம் ஏன் தேசியப் பண்ணின் வரிகளின் பொருளை உய்த்துணர வேண்டும்?

ஆசிரியர் குறிப்பு: 'நெகாராகூ' பாடல் வரிகளின் பொருளைப் புரிந்து கொள்ளவும் உய்த்துணரவும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.



(மூலம்: Koleksi peribadi Hasfalila binti Hassan)











நாட்டின் விண்வெளி வீரர்
(மூலம்: Koleksi peribadi Dato' Dr. Sheikh Muszaphar Shukor Al Masrie bin Sheikh Mustapha)



(மூலம்: *Malaysia Dateline*, 23 Ogos 2019)






(மூலம்: Sipadan.com)

'நெகாராகூ' பாடல் வரிகளைப் புரிந்து உய்த்துணர்வதால் முன்னேற்றம், ஒற்றுமை, விசுவாசம் ஆகிய பண்புகள் வளரும். இது நாட்டில் சுபிட்சத்தை ஏற்படுத்தும்.

௯.3.3
K௯.3.7

## தேசியப் பண்ணைப் பாடும் நெறிமுறைகள்

தேசியப் பண்ணைப் பாடும்போது சில நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். தேசியப் பண்ணின் நெறிமுறைகளைப் பின்பற்றிக் கடைப்பிடிப்பதால் மக்களிடையே நாட்டுப்பற்றை விதைத்து இலக்கையும் தனித்துவத்தையும் அடையலாம்.

### 1 பாடும்போது உடல் அமைப்பு:



- ✓ நிமிர்ந்து நிற்க வேண்டும்.
- ✓ இரண்டு கைகளையும் பக்கவாட்டில் கீழ்நோக்கி வைத்திருக்க வேண்டும்.
- ✓ இரண்டு கால்களையும் நெருக்கமாக வைத்திருக்க வேண்டும்.

### 2 பாடும்போது குரலும் உய்த்துணர்தலும்



- ✓ தெளிவாக ஒரு சேரப் பாட வேண்டும்.
- ✓ பாடல் வரிகளைச் சரியான உச்சரிப்புடனும் உற்சாகத்துடன் பாட வேண்டும்.
- ✓ பாடல் வரிகளை உய்த்துணர்தல் வேண்டும்.
- ✓ பாடும்போது விளையாட்டுத்தனம் கூடாது.

### 3 பள்ளிக்குத் தாமதமாக வரும் மாணவர்கள்



- ✓ தேசியப் பண்ணைக் கேட்டவுடன் நின்றுவிட வேண்டும்.
- ✓ புத்தகப்பையைக் கால் பக்கவாட்டில் வைக்க வேண்டும்.
- ✓ நிமிர்ந்து நிற்க வேண்டும்.

### 4 மாற்றுத் திறனாளிகள்



- ✓ சக்கரவண்டியில் அமர்ந்திருப்போர் தலையை நேராக வைத்திருக்க வேண்டும்.
- ✓ கண்கள் கொடியை நோக்கி இருக்க வேண்டும்.
- ✓ இரண்டு கைகளையும் தொடையின்மீது வைத்திருக்க வேண்டும்.
- ✓ கால்களை நெருக்கமாக வைத்திருக்க வேண்டும்.

தேசியப் பண்ணுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இப்பாடலைச் சரியான நெறிமுறையோடும் உணர்வோடும் பாட வேண்டும்.

### உங்களுக்குத் தெரியுமா?

'நெகாராகூ' பாடலை மதிக்காதவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டால் RM100.00க்கு மேற்போகாத அபராதம் அல்லது ஒரு மாதத்திற்கு மேற்போகாத சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

### நடவடிக்கை

பள்ளிக்குத் தாமதமாக வந்த மாணவனின் கதாபாத்திரத்தை மையப்படுத்தி 'நெகாராகூ' பாடும் நெறிமுறைகளை நடித்துக் காட்டுக.

தேசியப் பண்ணைப் பாடும், கேட்கும் நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

9.3.4
K9.3.6

ஆசிரியர் குறிப்பு: 'நெகாராகூ' பாடலைப் புரிந்துகொண்டு நெறிமுறைகளோடு பாட மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.


## தனித்துவத்தை உருவாக்கும் தேசியப் பண்

தேசியப் பண் வரிகளைப் புரிந்துகொண்டு உய்த்துணர்ந்தால் வெற்றிக்கு வழிவகுக்கும். தேசியப் பண்ணின் இலக்கு தனித்துவமிக்க மலேசியச் சமுதாயத்தை உருவாக்குவதே ஆகும்.

நாட்டுக்கும் அரசருக்கும் விசுவாசம் செலுத்தும் குடிமக்களை உருவாக்கும்.



உயர்ந்த வேட்கையையும் தன்னை மேம்படுத்திக் கொள்ள முயற்சி செய்யும் குடிமக்களையும் உருவாக்கும்.





மலேசிய மக்களிடையே பெருமிதமும் நன்றி உணர்வும் ஏற்பட்டு நாட்டின் மீது நேசத்தை விதைக்கும்.



ஒற்றுமையை விதைத்து மலேசியாவில் உள்ள பல்வேறு இனம், சமயம், கலாச்சாரத்தை மதிக்கச் செய்யும்.

தேசியப் பண்ணைப் புரிந்து கொள்வதன்வழி மக்களிடையே நாட்டுப்பற்றையும் நேசத்தையும் ஒற்றுமையையும் மேலோங்கச் செய்ய முடியும்.

**நடவடிக்கை**

தனித்துவத்தை ஏற்படுத்த நீ மேற்கொண்ட மூன்று முயற்சிகளைக் குறிப்பிடுக.

9.3.5
K9.3.7
K9.3.8

ஆசிரியர் குறிப்பு: தனித்துவத்தை ஏற்படுத்தும் தேசியப் பண்ணைப் புரிந்து கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## சிந்தித்துப் பதிலளி

## 'தர்சியா' விளையாடுவோம் வாரீர்

**கருவிகளும் பொருள்களும்** இணைக்கும் அட்டையும் கத்தரிக்கோலும்.

**பங்கேற்பாளர்கள்** இணையராக அல்லது குழுவாக.


**விளையாடும் முறை**


1. இணைப்பு அட்டைகளில் உள்ள கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.
2. கேள்வியையும் பதிலையும் இணைக்கவும்.
3. விடைகளைச் சரிபார்க்க விரைவு தகவல் குறியீட்டை (QR) நுணுகுக.


இணைப்பு அட்டைகள்

மாணிக்கக்கற்கள் வடிவம்

எடுத்துக்காட்டு:




அனைத்து அட்டைகளையும் இணைத்தபின் ஒரு வடிவம் உருவாகும்.


ஆசிரியர் குறிப்பு விரைவு தகவல் குறியீட்டிலிருந்து நிறைய இணைப்பு அட்டைகளைப் பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

## மீட்டுணர்வோம்

### தேசியப் பண்ணின் வரலாறு

பேராக் மாநிலத்தின் அதிகாரப்பூர்வ பாடலின் மெட்டைப் பயன்படுத்தி மலேசியாவின் தேசியப் பண், 1957ஆம் ஆண்டு நாட்டின் சுதந்திரக் கொண்டாட்டத்தை முன்னிட்டு உருவாக்கப்பட்டது.





**Lagu *Negaraku***

*Negaraku*
Tanah tumpahnya darahku
Rakyat hidup
Bersatu dan maju

Rahmat bahagia
Tuhan kurniakan
Raja kita
Selamat bertakhta

Rahmat bahagia
Tuhan kurniakan
Raja kita
Selamat bertakhta

### மலேசியாவின் தேசியப் பண் 'நெகாராகூ'

'நெகாராகூ' எனும் மலேசியாவின் தேசியப் பண் நாட்டின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் அடையாளமாகத் திகழ்கிறது.

### தேசியப் பண் வரிகளின் பொருளை உய்த்துணர்தல்

மக்கள் ஒற்றுமையுடன் வாழவும் நாட்டையும் மக்களையும் சுபிட்சத்துடன் ஆட்சிபுரியும் அரசரின் நல்வாழ்விற்காக இறைவனிடம் வேண்டுவதே தேசியப் பண்ணின் பொருளாகும்.

**நெகாராகூ பாடல் வரிகளின் பொருள்**

பல்லினத்தையும் பல சமயத்தையும் சார்ந்த மக்கள் ஒன்றிணைந்து முன்னேற்றத்தை நோக்கிச் செல்லக் கோருதல்.

நாட்டையும் மக்களையும் சுபிட்சத்துடன் ஆட்சிபுரியும் அரசரின் நல்வாழ்விற்காக இறைவனின் ஆசியை வேண்டுதல்.



### தேசியப் பண்ணைப் பாடும் நெறிமுறைகள்

நிமிர்ந்து நிற்றல், கால்களை நெருக்கமாக வைத்திருத்தல், தெளிவாகவும் உற்சாகத்துடன் ஒரு சேரப் பாடுதல், பாடும்போது விளையாட்டுத்தனம் கூடாது ஆகியவை தேசியப் பண் பாடும்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளாகும்.

### தனித்துவத்தை உருவாக்கும் தேசியப் பண்

தன்னை மேம்படுத்திக் கொள்ள முயற்சி செய்யவும் ஒற்றுமையை நேசிக்கவும் அரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்தும் தனிநபரை தேசியப் பண் உருவாக்குகிறது.



மலேசியாவின் தேசியப் பண் பற்றிய புரிதல், நாட்டின் அடையாளத்தின் மீது பெருமிதத்தை விதைக்கும். அடுத்த அலகில் மாணவர்கள் தேசிய மொழியையும் அதன் பொருளையும் கற்றுக் கொள்வர்.

## நடவடிக்கை

**பல்வேறு மூலங்களைப் பயன்படுத்துதல்.**

1. உன் மாநிலப் பண் வரிகளை எழுதுக.

மாநிலப் பண் வரிகள் ______________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________.

2. உன் மாநிலத்தின் பாடல் வரிகளின் பொருளை ஆராய்ந்து எழுதுக.

____________________________________________________

____________________________________________________

____________________________________________________.

3. ஆராய்ந்த பொருளின்வழி கிடைக்கப் பெற்ற பண்புக் கூறுகளைக் குறிப்பிடுக.

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

ஆசிரியர் குறிப்பு: மாநிலப் பண்ணின் பொருளையும் நற்பண்புகளையும் ஆராய மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.


# நாட்டை நேசிப்போம்

தேசியப் பண்ணின் முக்கியத்துவம், வரலாறு, வரிகள், நெறிமுறைகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதால் நாட்டை நேசிக்கும் உணர்வையும் தனித்துவத்தையும் விதைக்க முடியும்.



இன்று நாடு பெற்றிருக்கும் முன்னேற்றமும் ஒற்றுமையும் நாட்டை நேசிக்கும் குடிமக்களின் முயற்சியால் உருவானதாகும்.

(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)



அலகு 11

# தேசிய மொழி

## GERAKAN DEKAD BAHASA KEBANGSAAN

### Ikrar Setia Bahasa

Kami rakyat Malaysia
Berikrar akan terus memperjuangkan
bahasa Melayu sebagai;

Bahasa yang mencipta kedaulatan negara,
bahasa kesatuan politik,
ekonomi, budaya, sosial, pendidikan,
sains dan teknologi
serta pembangunan negara
bagi menjamin
kelangsungan bangsa Malaysia

Bahasa yang menjaga dan memupuk
kebebasan intelektual serta memerdekakan
pemikiran bangsa dan

Bahasa yang membawa, memelihara, mencipta,
serta mengembangkan ilmu dan tamadun negara
hingga ke peringkat dunia.

Sesungguhnya kami bertekad akan
meneruskan perjuangan ini.

Bahasa Jiwa Bangsa

Cintailah BAHASA KEBANGSAAN KITA



## சாரம்

மலாய்மொழி நம் நாட்டின் தேசிய மொழி. தேசிய மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் நாட்டுப்பற்றையும் நாட்டினத்தின் தனித்துவத்தையும் விதைக்க இயலும். இந்த அலகு, அரசியலமைப்பில் தேசிய மொழியின் நிலைத்தன்மையையும் பிற மொழிகளின் நிலைத்தன்மையையும் விவரிக்கின்றது. மேலும், தேசிய மொழியின் பங்கு, தேசிய மொழியின் நிலைத்தன்மையைப் பாதுகாக்கும் கழகங்கள் பற்றிய விளக்கம், மலாய்மொழி தேசிய மொழியாகப் பயன்படுத்துவதில் உள்ள சவால்கள் ஆகியவற்றை விவரிக்கின்றது.

## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. கூட்டரசு மலாயா அரசியலமைப்புச் சட்டத்தில் தேசிய மொழி, பிற மொழிகள் ஆகியவற்றின் நிலைத்தன்மை.
2. தேசிய மொழியின் பங்கு.
3. தேசிய மொழியின் நிலைத்தன்மையைப் பாதுகாக்கும் கழகங்கள்.
4. மலாய்மொழியைத் தேசிய மொழியாகப் பயன்படுத்துதலில் உள்ள சவால்கள்.






**BULAN** بولن بهاس كبڠسان
**BAHASA**
**KEBANGSAAN**
Peringkat Sekolah

**Anjuran bersama**

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

Dewan Bahasa dan Pustaka

Sekolah Kebangsaan (1) Jalan Batu Tiga, Klang, Selangor Darul Ehsan.

**குடியியல் நெறி**

அன்புடைமை

## AKPS அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத் திறன்

1. கூட்டரசு மலாயா அரசியலமைப்புச் சட்டத்தில் தேசிய மொழியின் முக்கியத்துவத்தின் சான்றுகளை ஆராய்தல்.
2. தேசிய மொழியின் பங்கு குறித்த காலநிரலையும் காலமாற்றத்தையும் அறிதல்.
3. தேசிய மொழியின் நிலைத்தன்மையையும் முக்கியத்துவத்தையும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த கடந்த கால நிகழ்வுகளையும் சிக்கல்களையும் ஆராய்தல்.
4. மலாய்மொழி தேசிய மொழியாக இருப்பதன் சவால்களைப் பற்றிய மாற்றத்தையும் தொடர்நிலையையும் விளக்குதல்.

## தேசிய மொழியின் நிலை

மலாய்மொழி நம் நாட்டின் தேசிய மொழியும் அதிகாரப்பூர்வ மொழியும் ஆகும். மலாய்மொழி அதிகாரப்பூர்வ மொழி என்று தேசிய மொழிச் சட்டம் 1963/1967இல் (Akta Bahasa Kebangsaan 1963/97) பதிவு செய்யப்பட்டுள்ளது. கல்வி மொழியாக மலாய்மொழியின் முக்கியத்துவம் குறித்து கல்விச் சட்டம் 1961 (Akta Pelajaran 1961), கல்விச் சட்டம் 1996 (Akta Pendidikan 1996) ஆகியவற்றில் பதிவாக்கப்பட்டது. அதே வேளையில் பல்லின மக்களைக் கொண்ட மலேசிய மக்கள் மெண்டரின், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை அன்றாட வாழ்வில் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தலாம்.




**"Perkara 152. Bahasa kebangsaan.**

(1) Bahasa kebangsaan adalah bahasa Melayu dan hendaklah ditulis dengan apa-apa tulisan sebagaimana yang diperintahkan dengan undang-undang oleh Parlimen:


Dengan syarat bahawa -

(a) tiada seorang pun boleh dilarang atau dihalang daripada menggunakan (selain bagi maksud rasmi), atau daripada mengajar atau belajar, apa-apa bahasa lain;"

(மூலம்: Asmah Haji Omar, 2015. *Dasar Bahasa Kebangsaan: Sejarah Memartabatkan Bahasa Kebangsaan dan Bahasa Rasmi Malaysia.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka)

**விரைந்து பதிலளி**

நம் நாட்டின் தேசிய மொழி என்ன?




தேசிய மொழி என்பது பெருமிதம் மிக்க நாட்டின் பாரம்பரியம் ஆகும். ஒவ்வொரு குடிமகனும் கட்டாயமாகத் தேசிய மொழியைப் பயன்படுத்தவும் மதிக்கவும் வேண்டும்.


9.4.1
K9.4.5

ஆசிரியர் குறிப்பு: நம் நாட்டின் தேசிய மொழியைப் புரிந்துகொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## தேசிய மொழியின் பங்கு


நாட்டை மேம்படுத்துவதில் தேசிய மொழி பல்வேறு வகையில் பங்காற்றுகிறது. மலேசிய நாட்டின் குடிமகனாக நாம் தேசிய மொழியைத் தொடர்பு மொழியாகத் தன்னம்பிக்கையுடன் பயன்படுத்துவதில் பெருமிதம் கொள்ள வேண்டும்.

# தேசிய மொழியின் பங்கு



### தனித்துவத்தின் அடையாளம்

தேசிய மொழி உலக அரங்கில் நாட்டின் அடையாளமாகவும் தனித்துவத்தின் சின்னமாகவும் திகழ்கிறது.



### நாட்டின் அடித்தளம்

ஒற்றுமையை உருவாக்கப் பல்லின மக்கள் புரிந்துகொள்ள வழிகாட்டியாக ஒரு மொழி தேவைப்படுகிறது.

தேசிய மொழியை முறையாகப் பயன்படுத்துவதில் உன் குடும்பத்தின் பங்கு என்ன?

**விரைந்து பதிலளி**

நீதிமன்றத்தில் அதிகாரப்பூர்வ அலுவல்களுக்குப் பயன்படுத்தப்படும் மொழி என்ன?

**நடவடிக்கை**

பல்வேறு மூலங்களைப் பயன்படுத்தி, பேச்சிலும் எழுத்திலும் தேசிய மொழியை முறையாகப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.



## எழுத்து மொழி

பொன்மொழி, பழமொழி, கவிதை போன்ற எழுத்துப் படிவ மொழியாகத் தேசிய மொழி பயன்படுத்தப்படுகிறது.

## தொடர்பு மொழி



தேசிய மொழி நம் நாட்டின் பல்லின மக்களிடையேயும் வட்டாரத்திலும் தொடர்பு மொழியாகவும் விளங்குகிறது.



## சட்ட மொழி

தேசிய மொழி நீதிமன்ற அதிகாரப்பூர்வ அலுவல்களில் பயன்படுத்தப்படுகிறது.




## பொருளாதார மொழி

தேசிய மொழி பொருளாதார நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுகிறது.



## நிர்வாக மொழி

தேசிய மொழி அதிகாரப்பூர்வ அலுவல்களான கூட்டம், விளக்கமளிப்பு, பயிற்சி, கடிதத் தொடர்புகளில் பயன்படுத்தப்படுகிறது.



## கல்வி மொழி

தேசிய மொழி பயிற்று மொழியாகவும் தகவல்களைக் கொண்டுச் சேர்ப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

(மூலம்: Asmah Haji Omar, 2015. *Dasar Bahasa Kebangsaan: Sejarah Memartabatkan Bahasa Kebangsaan dan Bahasa Rasmi Malaysia.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka)

நாட்டை மேம்படுத்துவதில் ஒவ்வொருவரும் முக்கியப் பங்கு ஆற்றுகின்றனர். மக்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்த தேசிய மொழி தொடர்புக் கருவியாகத் திகழ்கிறது.

9.4.2
K9.4.6

ஆசிரியர் குறிப்பு: தேசிய மொழியின் பங்கினை விளங்கிக் கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## தேசிய மொழியின் நிலையைப் பாதுகாக்கும் கழகம்

தேசிய மொழி மக்களிடையே நாட்டின் மீது நாட்டுப்பற்றை வளர்க்கிறது. தேசிய மொழியை மாண்புறச் செய்யப் பல்வேறு நடவடிக்கைகளும் தொடர் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

### தேசிய மொழியை மாண்புறச் செய்யும் கழகமும் முயற்சியும்



**டேவான் பஹாசா டான் புஸ்தாக்கா**

1956ஆம் ஆண்டு டேவான் பஹாசா டான் புஸ்தாக்கா நிறுவப்பட்டது. டேவான் பஹாசா டான் புஸ்தாக்கா தோற்றுவிக்கப்பட்டதற்கான நோக்கம் பின்வருமாறு:

- அனைத்து அலுவல்களிலும் தேசிய மொழியை முறையாகப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- பல்வேறு வாசிப்புப் பனுவல்களைத் தேசிய மொழியில் வெளியீடு செய்தல்.
- கலைச்சொற்களை உருவாக்குதலும் மொழியைத் தரப்படுத்துதலும்.
- எல்லா அலுவல்களிலும் தேசிய மொழியை முறையாகப் பயன்படுத்துவதற்கான தூண்டுதல் வழங்குதல்.



**கல்வி அமைப்புமுறை**

- ரசாக் அறிக்கை (1956) தேசியப் பள்ளிகளில் தேசிய மொழியைப் பயிற்று மொழியாக்கியது.
- ரஹ்மான் தாலிப் அறிக்கை (1960) பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தேசிய மொழியைப் பயிற்று மொழியாக்கியது.
- தேசிய மொழிச் சட்டம் 1963/67இல் உருவாக்கப்பட்டது.



**மலேசியத் தேசியப் பல்கலைக்கழகம்**

- 1970ஆம் ஆண்டில் தேசிய மொழி அறிவு மொழியாக மாண்புறச் செய்ய மலேசியத் தேசியப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

**விரைந்து பதிலளி**

எப்போது மலேசியத் தேசியப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது?




## DEKAD BAHASA KEBANGSAAN

### தேசிய மொழி மாதம்

- மக்களிடையே தேசிய மொழிப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதம் தேசிய மொழி மாதம் கொண்டாடப்படுகிறது.

### பத்தாண்டுகளில் தேசிய மொழி

- மலேசியாவில் பல்வேறு துறைகளில் மலாய்மொழியைத் தேசிய மொழியாகவும் அதிகாரப்பூர்வ மொழியாகவும் வலுப்பெறச் செய்தல்.



MBMMBI

MEMARTABATKAN BAHASA MALAYSIA MEMPERKUKUH BAHASA INGGERIS

### MBMMBI கொள்கை

- 2012ஆம் ஆண்டு தேசிய மொழியை மாண்புறச் செய்யவும் ஆங்கில மொழியைத் திடப்படுத்தவும் 'MBMMBI' கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

### ஏன் தேசிய மொழியை மாண்புறச் செய்ய வேண்டும்?

தேசிய மொழியை மாண்புறச் செய்வது அனைவரின் கடமையாவதோடு மக்களிடையே விதைக்கவும் வேண்டும். தேசிய மொழி நாட்டின் தனித்துவத்தையும் அடையாளத்தையும் பிரதிபலிக்கின்றது.

9.4.3
K9.4.7

ஆசிரியர் குறிப்பு: தேசிய மொழியை மாண்புறச் செய்யும் கழகத்தை அறிய மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## மலாய்மொழியைத் தேசிய மொழியாகப் பயன்படுத்துவதில் ஏற்படும் சவால்கள்

இனப் பாகுபாடின்றி மலேசியக் குடிமக்கள் அனைவரும் தேசிய மொழியைச் சரளமாகப் பயன்படுத்த வேண்டும். முழுமையான தேசிய மொழியின் பயன்பாடு முன்னேற்றமிகு நாட்டை உருவாக்கும். மலாய்மொழி அதிகாரப்பூர்வ அலுவல்களில் பயன்படுத்தப்படும் தேசிய மொழியாகும். தேசிய மொழி பல்வேறு சவால்களைச் சந்தித்தாலும் நாட்டின் அடையாளம் என்பதால் தேசிய மொழியின் நிலைத்தன்மையும் நிலைப்பாட்டையும் வலுப்படுத்துதல் அவசியம்.

**அன்றாடத் தொடர்பு**

மற்ற மொழிகளோடு மலாய்மொழியும் பெரும்பாலும் அன்றாடத் தொடர்பில் பயன்படுத்தப்படுகிறது. குடிமக்களாகிய நாம் மலாய்மொழியின் பயன்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.



### மலாய்மொழியைத் தேசிய மொழியாகப் பயன்படுத்துவதில் ஏற்படும் சவால்கள்



**பேசுபவர்களின் இயல்பு**

ஆர்வமின்மை அல்லது தயக்கம் தேசிய மொழியை மாண்புறச் செய்யும் முயற்சிகளுக்குத் தடையாக அமைகின்றன. ஒவ்வொரு மலேசியக் குடிமகனும் தேசிய மொழியின் ஆற்றல் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.

(மூலம்: Asmah Haji Omar, 2015. *Dasar Bahasa Kebangsaan: Sejarah Memartabatkan Bahasa Kebangsaan dan Bahasa Rasmi Malaysia.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka)

ஆசிரியர் குறிப்பு: தேசிய மொழி பயன்பாட்டில் ஏற்படும் சவால்களை அறிய மாணவர்களுக்கு உதவுதல்.

## தகவல் தொழில்நுட்பத் துறை

இன்றைய காலக்கட்டத்தில் தகவல் தொழில்நுட்பத் துறை மிகவும் முக்கியமானது. பெரும்பாலான தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளும் கருவிகளும் ஆங்கில மொழியிலே உள்ளன.





## குடும்பப் பின்னணி

தேசிய மொழியை முறையாகப் பயன்படுத்த பெற்றோர் அல்லது குடும்பத்தினர் உந்துதலையும் வழிகாட்டுதலையும் வழங்க வேண்டும்.



## கல்வித் துறை

கற்றலில் மாணவர்கள் தாய்மொழியையும் வட்டாரவழக்குகளையும் அதிகமாகப் பயன்படுத்துவதால் தேசிய மொழிப் பயன்பாட்டில் பல சவால்களை எதிர்நோக்க நேரிடும்.



## மொழிக் கலப்பு

நிகழ்ச்சிகளிலும் சமூக ஊடகங்களிலும் தேசிய மொழிப் பயன்பாட்டில் பல்வேறு மொழிக் கலப்பு ஏற்பட்டதால் வாக்கிய அமைப்பு முறை, கலைச்சொற்கள், உச்சரிப்பு ஆகியவை தவறாகப் பயன்படுத்தப்படுகிறது.

**சொற்களஞ்சியம்**

**மொழிக் கலப்பு**: பல்வேறு மொழிகளிலிருந்து கலந்து பேசும் பேச்சு மொழியாகும்.

மலேசியக் குடிமக்களாகிய நாம் ஒற்றுமையின் மொழியாகவும் அடையாளமாகவும் திகழும் மலாய்மொழியைப் பெருமிதத்துடன் மாண்புறச் செய்ய வேண்டும். நிறைய சவால்கள் இருப்பினும் மலாய்மொழியைத் தேசிய மொழியாக மாண்புறச் செய்ய வேண்டும்.

9.4.4
K9.4.5

## மொழி இனத்தின் உயிர்

மொழி இனத்தின் உயிர் (Bahasa Jiwa Bangsa) எனும் பாடல் தேசிய மொழிப் பற்றை மேலோங்கச் செய்ய உருவாக்கப்பட்டது. மலேசியக் குடிமக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் தேசிய மொழியைப் பயன்படுத்த இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன. மொழியின்வழி பல்லின மக்களை ஒன்றிணைக்க முடியும்.

### *LAGU BAHASA JIWA BANGSA*

Gunakanlah bahasa kebangsaan kita
Marilah amalkan ramai-ramai
Bahasalah menyatukan kita semua
Yakinlah bahasa jiwa bangsa

Marilah mari rakyat semua
Buktikan taat setia dengan satu bahasa
Maju bangsa dan maju negara
Megahkan bahasa kita
Bahasa jiwa bangsa

Lagu/lirik: Dol Ramli

*Bahasa Jiwa Bangsa* பாடல்

### தேசிய மொழி ஏன் 'மொழி இனத்தின் உயிர்' எனப்படுகிறது?

மலேசியர்கள் தேசிய மொழியில் ஆளுமை பெற்றிருக்க வேண்டும். தேசிய மொழியின் பயன்பாடு மக்கள் ஒன்றுபட்டு ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் இருக்கின்றனர் என்பதை நிரூபிக்கின்றது. நாம் எங்கிருந்தாலும் தேசிய மொழியைப் பயன்படுத்துவதில் தன்னம்பிக்கையும் பெருமிதமும் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் குறிப்பு: 'மொழி இனத்தின் உயிர்' எனும் பாடலைச் சரியான மெட்டுடன் பாடுவதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

9.4.2
K9.4.7

## மீட்டுணர்வோம்

### தேசிய மொழியின் நிலை

- ★ மலாய்மொழி நாட்டின் தேசிய மொழியாகவும் அதிகாரப்பூர்வ மொழியாகவும் திகழ்கிறது.
- ★ மலாய்மொழி அதிகாரப்பூர்வ மொழி என்பது தேசிய மொழிச் சட்டம் 1963/67இல் இடம் பெற்றுள்ளது.
- ★ பல்லின மலேசிய மக்கள் பிற மொழிகளையும் அன்றாடத் தொடர்பு மொழியாகவும் பயன்படுத்தலாம்.

### தேசிய மொழியின் பங்கு

- ★ நாட்டின் அடித்தளம்
- ★ தனித்துவத்தின் அடையாளம்
- ★ நிர்வாக மொழி
- ★ சட்ட மொழி
- ★ தொடர்பு மொழி
- ★ பொருளாதார மொழி
- ★ எழுத்து மொழி
- ★ கல்வி மொழி

### தேசிய மொழியின் நிலையைப் பாதுகாக்கும் கழகமும் முயற்சியும்

- ★ கல்வி முறை
- ★ டேவான் பஹாசா டான் புஸ்தாக்கா
- ★ மலேசியத் தேசியப் பல்கலைக்கழகத் தோற்றம்
- ★ தேசிய மொழியை மாண்புறச் செய்யவும் ஆங்கில மொழியைத் திடப்படுத்தவும் ‘MBMMBI’ கொள்கை
- ★ தேசிய மொழி மாதம்
- ★ பத்தாண்டில் தேசிய மொழி


### மலாய்மொழி தேசிய மொழியாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் சவால்கள்

- ★ மொழிக் கலப்பு
- ★ கல்வித் துறை
- ★ பேசுபவர்களின் இயல்பு
- ★ குடும்பப் பின்னணி
- ★ தகவல் தொழில்நுட்பத் துறை
- ★ அன்றாடத் தொடர்பு

இந்த அலகு, தேசிய மொழியின் நிலைத்தன்மை, பங்கு, சவால்கள், தேசிய மொழியின் நிலையைப் பாதுகாக்கும் கழகம் ஆகியவற்றை விளக்குகின்றது. அடுத்த அலகில் மாணவர்கள் தேசிய மலரைக் கற்று அறிந்து கொள்வர்.

## சிந்தித்துப் பதிலளி

அ. நாட்டை மேம்படுத்துவதில் தேசிய மொழியின் பங்கைக் குறிப்பிடுக.




ஆ. சரியான விடைகளைக் கொண்டு காலி இடத்தை நிறைவு செய்க.

1. கூட்டரசு மலாயாவின் அரசியலமைப்புச் சட்டம் மலாய்மொழியைத் ______________________ அறிவித்துள்ளது.

2. கூட்டம், விளக்கமளிப்பு போன்ற ______________________ அலுவல்களில் தேசிய மொழியைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும்.

3. மலேசியாவின் பல்வேறு இனங்கள் ______________________ பிற மொழிகளைப் பயன்படுத்துகிறது.

4. தேசிய மொழி மாதம் ஒவ்வோர் ஆண்டும் ______________________ மாதத்தில் கொண்டாடப்படுகிறது.

5. 'மொழி இனத்தின் உயிர்' எனும் பாடல் மலேசிய மக்கள் தங்கள் வாழ்வில் ______________ மொழியைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறது.

ஆசிரியர் குறிப்பு
- இந்தப் பக்கத்தைப் படியெடுத்து வழங்குதல்.
- மாணவர்கள் பதிலளிக்க வழிகாட்டுதல்.

# நாட்டை நேசிப்போம்


மக்கள் தேசிய மொழியைச் சரியாகப் பயன்படுத்துவதால் தேசிய மொழி பெருமைமிகு அடையாளச் சின்னமாக விளங்குகிறது.



ஹன்குக் பல்கலைக்கழகம்,
தென்கொரியா



ஓஹயோ பல்கலைக்கழகம்,
அமெரிக்கா




விக்டோரியா பல்கலைக்கழகம்,
வெலிங்டன் நியூசிலாந்து



அந்நிய மொழி பல்கலைக்கழகம்,
பெய்ஜிங், சீனா

வெளிநாடுகளில் மலாய்மொழிக் கல்வியை வழங்கும் சில பல்கலைக்கழகங்கள்
(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)



அலகு 12

# செம்பருத்தி தேசிய மலர்



## சாரம்

நம் நாட்டின் தேசிய மலர் செம்பருத்தியாகும். இந்த அலகு செம்பருத்தி தேசிய மலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான பின்னணி, பெயர், செம்பருத்தியின் சிவப்பு வண்ணத்தின் பொருள், தேசியக் கோட்பாட்டுடன் தேசிய மலர் இதழ்களின் அடையாளம் ஆகியவற்றை விவாதிக்கின்றது.

**குடியியல் நெறி**

மகிழ்ச்சி



## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. செம்பருத்தியைத் தேசிய மலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான பின்னணி.
2. செம்பருத்தியின் பெயர், சிவப்பு வண்ணத்தின் பொருள்.
3. தேசியக் கோட்பாடுடன் தேசிய மலர் இதழ்களின் அடையாளம்.

## AKPS அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத் திறன்

1. செம்பருத்தியைத் தேசிய மலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான காலநிரலை அறிதல்.
2. செம்பருத்தியின் பெயர், சிவப்பு வண்ணத்தின் பொருள்விளக்கம் செய்தல்.
3. செம்பருத்தி மலரின் இதழ்களுக்கும் தேசியக் கோட்பாட்டுக்கும் உள்ள தொடர்பை விளக்குதல்.



## செம்பருத்தியின் சிறப்பு

செம்பருத்தி மலேசியாவின் தேசிய மலராகும். செம்பருத்தியின் தனித்தன்மை பிற மலர்களிடம் இல்லாததால் தேசிய மலராகத் தேர்வு செய்யப்பட்டது.



1958ஆம் ஆண்டு அனைத்து மாநில அரசாங்கத்திடமிருந்தும் தேசிய மலருக்காக ஒரு மலரின் பெயரைப் பரிந்துரைக்க விவசாய அமைச்சுக் கோரியது.




கூட்டரசு மலாயாவின் தேசிய மலரைத் தேர்ந்தெடுக்க ஏழு பூக்கள் பரிந்துரைக்கப்பட்டன. அவை செம்பருத்தி, மனோரஞ்சிதம், மல்லிகை, ரோஜா, செண்பகம், தாமரை, மகிழம் ஆகும்.

**21ஆம் நூற்றாண்டுக் கற்றல் திறன்**

### சொல் வலைக்குழு

1. நான்கு குழுக்களை உருவாக்குதல்.
2. 'தேசிய மலராகச் செம்பருத்தியின் அவசியம்' எனும் தலைப்பைக் குழுத்தலைவர் எழுதுதல்.
3. குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தம் எண்ணத்தை வெவ்வேறு வண்ணத் தூவலைக் கொண்டு எழுதுதல்; படைத்தல்.

உனக்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டால், எந்த மலரைத் தேசிய மலராக நீ தேர்ந்தெடுப்பாய்? காரணத்தைக் கூறு.

**ஆசிரியர் குறிப்பு** செம்பருத்தியைத் தேசிய மலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான பின்னணியை மாணவர்கள் அறிய வழிகாட்டுதல்.



நாட்டின் முதல் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் புத்ரா அல் ஹஜ் அவர்கள் கவனமாகப் பரிசீலித்த பிறகு சிவப்பு செம்பருத்தி மலரைத் தேர்வு செய்தார். 28 ஜூலை 1960ஆம் ஆண்டு செம்பருத்தி, தேசிய மலராகப் பிரகடனம் செய்யப்பட்டது.



சிவப்புச் செம்பருத்தி தேர்வு செய்யப்பட்டதற்கான காரணம்:

- தனித்து நிற்கும் வண்ணமும் வடிவமும் பெற்றுள்ளது.
- நாடு முழுதும் ஒரே பெயரில் விளங்குகிறது.
- நாட்டில் எல்லா இடங்களிலும் எளிதில் கிடைக்கிறது.
- ஆண்டு முழுவதும் பூக்கிறது.
- அக்காலக் கட்டத்தில் பிற நாடுகளுக்குத் தேசிய மலராக இல்லை.

(மூலம்: Jabatan Penerangan Malaysia, 2019. *Malaysia Focus, 62 Years Hari Merdeka, The Story of Malaysia Independence, Volume 2/2019*. Kuala Lumpur: Jabatan Penerangan Malaysia)

தேசிய மலரான செம்பருத்தி நாட்டின் அடையாளமாகத் திகழ மிகவும் பொருத்தமானது. 1963ஆம் ஆண்டு, சபாவும் சரவாக்கும் மலேசியாவில் இணைந்த பின்னரும் செம்பருத்தி தேசிய மலராக நிலைநிறுத்தப்பட்டது.

**விரைந்து-பதிலளி**

எப்போது செம்பருத்தி தேசிய மலராகப் பிரகடனப்படுத்தப்பட்டது?

9.5.1
K9.5.4

**உங்களுக்குத் தெரியுமா?**

- செம்பருத்தியின் அறிவியல் பெயர் 'ஹைபிஸ்கஸ் ரோசா சினென்சிஸ்' (Hibiscus rosa-sinensis) ஆகும்.
- மலேசியாவில் மட்டும் ஏறக்குறைய 300 வகையான செம்பருத்தி இனமுண்டு.

## செந்நிற செம்பருத்தி

**செந்நிற** செம்பருத்தி தேர்வு செய்யப்பட்டதற்கு அதன் வண்ணமே காரணமாகும். சிவப்பு வண்ணம் **தன்னூக்கம்,** (semangat waja), சிறந்த குடிமக்கள், (warganegara cemerlang) துணிவு (keberanian) ஆகிய பண்புகளைக் குறிக்கின்றது.

### Bunga Raya Merah Bermakna

Bunga raya bunga kebangsaan,
**Rona** merah jadi pilihan,
Penuh **simbolik** teras kehidupan,
Jadi panduan untuk kejayaan.

Merah bererti semangat waja,
Tersemat di jiwa rakyat jelata,
Warganegara cemerlang juga maksudnya,
Mendukung segala aspirasi negara.

Merah membara lambang keberanian,
Berjiwa kental hadapi cabaran,
Rakyat maju tanpa halangan,
Makmur negara satu haluan.



தன்னூக்கம்
(மூலம்: Persekutuan Bola Keranjang Kerusi Roda Malaysia)



சிறந்த குடிமக்கள்
(மூலம்: Tvetmara)



துணிவு
(மூலம்: *Borneo Post*, 13 Oktober 2012)

நாட்டின் பெயரை உலகளவில் உயர்த்துவதற்காக மக்களிடையே இருக்க வேண்டிய நெறிகளைக் சிவப்பு வண்ணத்திலான சொற்கள் குறிக்கின்றன.

**சொற்களஞ்சியம்**

**தன்னூக்கம்:** சுய ஊக்கம்
**செந்நிறம்:** சிவப்பு நிறம்

உன் அளவில் சிவப்பு வண்ணத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

**விரைந்து பதிலளி**

செம்பருத்தி மலரின் சிவப்பு வண்ணத்தின் மூன்று பொருளைப் பட்டியலிடுக.

**21ஆம் நூற்றாண்டுக் கற்றல் திறன்**

**பாடல்வழி கற்றல்**


படைப்பாக்கத்திறனோடு இணையராகக் கவிதையைப் பாடுக.

௭.5.2

ஆசிரியர் குறிப்பு: கவிதையை ஒப்புவிக்க மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## நடவடிக்கை

# செம்பருத்தி காந்த அம்பெய்தல்




**விளையாடும் முறை:**

1. இவ்விளையாட்டைக் குழு முறையில் விளையாட வேண்டும்.
2. முதல் விளையாட்டாளர் வட்டிலில் அம்பெய்த வேண்டும்.
3. ஒவ்வொரு விளையாட்டாளரும் வட்டில் நிற அடிப்படையில் ஒரு கேள்வி அட்டையை எடுத்து கேள்விக்குப் பதில் கூறுவர்.
4. 'பூடக' வட்டத்தில் அம்பு ஒட்டிக் கொண்டால் விளையாட்டாளர் ஆசிரியரிடமிருந்து கேள்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
5. விளையாட்டாளர் சரியான விடையைக் கூறிவிட்டால் கூடுதல் புள்ளி வழங்கப்படும்.
6. விடை பிழையாக இருந்தால், மற்ற குழு உறுப்பினர்களுக்குப் பதிலளிக்க அக்கேள்வி கொடுக்கப்படும்.
7. அக்கேள்விக்குச் சரியான பதிலளித்த குழுவிற்கு அரைப் புள்ளி வழங்கப்படும்.
8. அதிகமான புள்ளிகள் பெற்ற குழுவே வெற்றியாளர்.

**எடுத்துக்காட்டுக் கேள்வி அட்டை**

**செம்பருத்தியைத் தேசிய மலராகத் தேர்ந்தெடுத்தவர் யார்?**

**எடுத்துக்காட்டு பூடக அட்டை**

**செம்பருத்தியின் சிவப்பு வண்ணத்தின் மூன்று பொருளைக் குறிப்பிடுக.**

ஆசிரியர் குறிப்பு

- கேள்வி அட்டைக்கும் பூடகக் கேள்வி அட்டைக்கும் கேள்விகள் தயாரிக்க வேண்டும்.
- வட்டிலையும் காந்த அம்பு அட்டையையும் தயாரிக்க வேண்டும்.

## செம்பருத்தியும் தேசியக் கோட்பாடும்

செம்பருத்தியின் ஐந்து இதழ், ஐந்து தேசியக் கோட்பாட்டினைக் குறிக்கின்றன. தேசியக் கோட்பாடு மலேசியர்களிடையே ஒற்றுமை உணர்வை உருவாக்கும் தேசியச் **சித்தாந்தமாகும்**.



**1**

Kepercayaan kepada Tuhan
இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்



**5**

Kesopanan dan Kesusilaan
நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்

21ஆம் நூற்றாண்டுக் கற்றல் திறன்


**சிந்தனை – இணையர்**

1. ஒற்றுமையின் சின்னமாகச் செம்பருத்தியின் முக்கியத்துவம் குறித்த தகவல்களைத் தனியாளாகத் தேடுதல்.
2. தொடர்ந்து, இணையராகக் கண்டுபிடிப்புகளின் தகவல்களைக் கலந்துரையாடுதல்.
3. குழு உறுப்பினர்கள் வெண்திரைக் காட்சியின் மூலம் பதில்களைப் பகிர்ந்து கொள்ளுதல்.



**2**

Kesetiaan kepada Raja dan Negara
பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துதல்





**3**

Keluhuran Perlembagaan
அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்

**4**

Kedaulatan Undang-undang
சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்

இனத்தையும் சமயத்தையும் பொருட்படுத்தாமல் தேசியக் கோட்பாடு அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கிறது. செம்பருத்தியின் ஒவ்வொரு இதழும் தேசியக் கோட்பாட்டின் கொள்கைகளை எல்லா நேரத்திலும் தாங்கியிருப்பதை நினைவூட்டுகிறது.



**சொற்களஞ்சியம்**

**சித்தாந்தம்**: கொள்கை அல்லது புரிதல்.

**விரைந்து பதிலளி**

தேசியக் கோட்பாட்டைக் குறிப்பிடுக.

9.5.3
K9.5.5

ஆசிரியர் குறிப்பு: செம்பருத்தியின் 5 இதழுக்கும் தேசியக் கோட்பாடு ஐந்திற்கும் இடையிலான தொடர்பை விளங்கிக் கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

## பெருமைமிகு சின்னம் செம்பருத்தி

நாட்டின் அடையாளமான செம்பருத்தி அதிகாரப்பூர்வ, அதிகாரப்பூர்வமற்ற அலுவல்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. செம்பருத்தியின் பெயரும் படமும் குறியீடாகவும் சின்னமாகவும் அழகுப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

### மலேசிய மக்களின் வாழ்க்கையில் செம்பருத்தி குறியீட்டின் பயன்பாடு



மாட்சிமை தாங்கிய மாமன்னரின் முஸ்காட்



சரவாக் மாநிலச் சின்னம்




பணம்




விளையாட்டு

21ஆம் நூற்றாண்டுக் கற்றல் திறன்

**மனவரைபடம்**

1. பல்வேறு மூலங்களிலிருந்து, அதிகாரப்பூர்வ அலுவல்களில் செம்பருத்தி சின்னங்களைப் பயன்படுத்தும் எடுத்துக்காட்டுகளைக் கண்டறியவும்.
2. பொருத்தமான சிந்தனை மனவரைபடத்தில் படைக்கவும்.




அஞ்சல் தலை




மலேசியாவிற்கு வருகை தரும் ஆண்டு




சாலையின் பெயர்




பள்ளிச் சின்னம்

செம்பருத்திக் குறியீட்டின் பயன்பாடு நமக்குத் தேசியக் கோட்பாட்டைக் நினைவூட்டுகிறது. மலேசியக் குடிமக்களாகிய நாம் செம்பருத்திக் குறியீட்டைப் பொறுப்புணர்வுடன் பயன்படுத்த வேண்டும்.

**விரைந்து பதிலளி**

செம்பருத்தியின் குறியீடு மலேசிய மக்களின் வாழ்வில் எவ்வகையில் பங்களிக்கிறது?

9.5.3
K9.5.6

ஆசிரியர் குறிப்பு

நாட்டின் அதிகாரப்பூர்வ அலுவல்களில் செம்பருத்தியின் பயன்பாட்டினை மாணவர்கள் விளங்கிக் கொள்ள வழிகாட்டுதல்.

உருவாக்குவோம் வாரீர்

## செம்பருத்தி தாள்கனத்தி (Paper weight)

**கருவிகளும் பொருள்களும்**

தட்டை வடிவ கல்
‘கிராயோன்’ வண்ணம்
நீர் வண்ணம்
தூரிகை
நகப்பூச்சு



1 தட்டை வடிவிலான கல்லில் ‘கிரயோன்’ வண்ணத்தைக் கொண்டு செம்பருத்தி வடிவத்தை வரைய வேண்டும்.



2 செம்பருத்தியை நீர் வண்ணத்தைக் கொண்டு வண்ணமிட்டுக் காய வைக்க வேண்டும்.



3 அதன்மேல் நகப்பூச்சுவைப் பூச வேண்டும். மீண்டும் காய வைக்க வேண்டும்.



4 தாள்கனத்தி தயார்.



ஆசிரியர் குறிப்பு

- சில உதாரணங்களைக் காட்டி தாள்கனத்தியைச் செய்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.
- செய்து முடித்த தாள்கனத்தியைச் சிற்றுண்டி அல்லது தொழில்முனைவர் நாளன்று விற்பனை செய்தல்.

## மீட்டுணர்வோம்

### செம்பருத்தியின் சிறப்பு

செம்பருத்தி மலர் தேர்வு செய்யப்பட்டதற்கான காரணம் :

- தனித்து நிற்கும் வண்ணமும் வடிவமும் பெற்றுள்ளது.
- நாடு முழுதும் ஒரே பெயரில் விளங்குகிறது.
- நாட்டில் எல்லா இடங்களிலும் எளிதில் கிடைக்கிறது.
- ஆண்டு முழுவதும் பூக்கிறது.
- அக்காலக் கட்டத்தில் பிற நாடுகளின் தேசிய மலராக இல்லை.

### செந்நிற செம்பருத்தி

செம்பருத்தியின் சிவப்பு வண்ணத்தின் பொருள்:

- தன்னூக்கம்
- சிறந்த குடிமக்கள்
- துணிவு

### பெருமைமிகு சின்னம் செம்பருத்தி

நாட்டின் அடையாளமான செம்பருத்தி அதிகாரப்பூர்வ, அதிகாரப்பூர்வமற்ற அலுவல்களில் பயன்படுத்தப்படுகிறது.



### செம்பருத்தி மலரும் தேசியக் கோட்பாடும்

செம்பருத்தியின் ஐந்து இதழ், ஐந்து தேசியக் கோட்பாட்டினைக் குறிக்கின்றன:


- இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்.
- பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துதல்.
- அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்.
- சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்.
- நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்.

இந்த அலகு, நேசிக்கும் நாட்டின் அடையாளமாகச் செம்பருத்தி மலர் பற்றிய புரிதலை அளிக்கின்றது. இந்தப் புரிதலானது மலேசிய மக்களிடையே நாட்டின் மீது அன்பையும் மரியாதையையும் விதைக்கிறது.

## சிந்தித்துப் பதிலளி

அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளித்திடுக.

**அ.** கீழ்க்காணும் குறுக்கெழுத்துப் பயிற்சியை நிறைவு செய்க.




### மேலிலிருந்து கீழ்

1. செம்பருத்தி மலேசியர்களின் ஒற்றுமையின் __________ ஆகும்.
2. செம்பருத்தி ஒரே __________ பெயர் கொண்டது.
3. செம்பருத்தியின் படம்__________ பயன்படுகிறது.
4. மலேசிய மக்கள் __________ கொண்டிருக்க வேண்டும்.
5. __________ வண்ணம் துணிவைக் குறிக்கிறது.
6. தேசிய மலராக __________ மாதம் 1960ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது.

### இடமிருந்து வலம்


7. __________ தேசிய மலராகும்.
8. செம்பருத்தியின் இதழ்கள் ஐந்து __________ பிரதிபலிக்கின்றன.
9. மலேசிய __________ தேசிய மலரை மதிக்க வேண்டும்.
10. தேசிய மலருக்கு __________ மலர் பரிந்துரைக்கப்பட்டன.

ஆசிரியர் குறிப்பு
- மாணவர்களைப் பதிலளிக்கக் கோருதல்.
- இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்குதல்.

**ஆ.** **செம்பருத்தியைத் தேசிய மலராகப் பிரகடனப்படுத்திய நிகழ்வுகளைச் சரியான நிரல்படி வரிசைப்படுத்துக.**

| நிகழ்வு | நிரல் |
| --- | --- |
| 28 ஜூலை 1960ஆம் நாள் செம்பருத்தி தேசிய மலராகப் பிரகடனப்படுத்தப்பட்டது. | |
| 1958 ஆம் ஆண்டு விவசாய அமைச்சு தேசிய மலர் தேர்வுக்கு ஒரு மலரைப் பரிந்துரை செய்ய அனைத்து மாநில அரசிடம் கேட்டுக் கொண்டது. | |
| துங்கு அப்துல் ரஹ்மான் புத்ரா அல்-ஹஜ் சிவப்பு செம்பருத்தியைத் தேர்வு செய்தார். | |
| தேசிய மலர் தேர்வுக்கு ஏழு வகை மலர்கள் பரிந்துரைக்கப்பட்டன. | |

**இ.** **தேசியக் கோட்பாடு ஐந்தனை எழுதுக.**




ஆசிரியர் குறிப்பு இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்குதல்.

# நாட்டை நேசிப்போம்

செம்பருத்தி தேசிய அடையாளமாக்கப்பட்டதற்கு நாம் பெருமிதம் கொள்ள வேண்டும். செம்பருத்தி, இன ஒற்றுமையின் அடையாளம். மலேசியச் சமுதாயம் ஒன்றுபடும்போது நாட்டின் அமைதியும் நல்லிணக்கமும் உறுதிச் செய்யப்படுகிறது.




(மூலம்: Jabatan Penerangan Malaysia)



# துணைநூல் பட்டியல்


A. Samad Ahmad (peny.), 1996. *Sulalatus Salatin*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Abd. Manaf Haji Ahmad, 2009. *Kontrak Sosial*. Kuala Lumpur: Utusan Publications & Distributors Sdn. Bhd.

Abdul Aziz Bari, 2006. *Majlis Raja-Raja: Kedudukan dan Peranan dalam Perlembagaan Malaysia*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Abdul Rahman Haji Ismail dan Azmi Ariffin (ed.), 2016. *Sejarah Malaysia: Wacana Kedaulatan Bangsa, Kenegaraan dan Kemerdekaan*. Pulau Pinang: Penerbit Universiti Sains Malaysia.

Abdul Rahman Haji Abdullah, 2016. *Gerakan Penjajahan dan Anti Penjajahan Tanah Melayu*, 1511–1957. Kuala Lumpur: Karya Bestari.

Abdullah Zakaria Ghazali, 1996. *Terengganu Tokoh Pentadbiran dan Perjuangan*. Kuala Lumpur: Persatuan Muzium Malaysia.

Abdullah Zakaria Ghazali, 1997. *Pasir Salak: Pusat Gerakan Menentang British di Perak*. Ipoh: Yayasan Perak.

Abdullah Zakaria Ghazali, 1997. *Penghulu Dol Said dalam Melaka dan Sejarahnya*. Melaka: Persatuan Sejarah Malaysia Cawangan Melaka.

Andaya, B.W. dan Leonard, Y.A., 1983. *Sejarah Malaysia*. Kuala Lumpur: Macmillan Publishers.

Arkib Negara Malaysia, 2013. *Arkib Warisan Eksklusif*. Kuala Lumpur: Arkib Negara Malaysia.

Arkib Negara Malaysia, 2013. *Citra Merdeka 1957–2007*. Kuala Lumpur: Arkib Negara Malaysia.

Arkib Negara Malaysia, 2017. *Persekutuan Tanah Melayu 1948: Asas Negara Merdeka*. Kuala Lumpur: Arkib Negara Malaysia.

Asmah Haji Omar, 2007. "Taksonomi Pertemuan Bahasa: Di Manakah Letaknya Bahasa Rojak?". Kertas kerja dalam Seminar Bahasa Rojak: Kecelaruan Penggunaan Bahasa Melayu. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka, 18–19 Julai 2007.

Asmah Haji Omar, 2015. *Dasar Bahasa Kebangsaan: Sejarah Memartabatkan Bahasa Kebangsaan dan Bahasa Rasmi Malaysia*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Asmah Haji Omar, 2015. *Ensiklopedia Bahasa Melayu*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Asmah Haji Omar, 2015. *Susur Galur Bahasa Melayu*. Edisi Kedua. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Azmah Abdul Manaf, 2001. *Sejarah Sosial Masyarakat Malaysia*. Kuala Lumpur: Utusan Publications & Distributors Sdn. Bhd.

Buyong Adil, 1974. *Sejarah Sarawak*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Buyong Adil, 1981. *Sejarah Negeri Sembilan*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Buyong Adil, 1981. *Sejarah Sabah*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Dayu Sansalu, 2017. *DSP Ontoros @ Antenom: Pahlawan Terbilang Bangsa Murut*. Kota Kinabalu: Pusaka.

Emerson, R., 1982. *Malaysia*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Gopinath, A., 1993. *Sejarah Politik Pahang 1880–1935*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Hashim Musa, 2005. *Pemerkasaan Tamadun Melayu Malaysia: Menghadapi Globalisasi Barat*. Kuala Lumpur: Penerbit Universiti Malaya.

Hassan Ahmad (ed.), 2003. *Undang-undang Melaka dan Undang-undang Laut*. Kuala Lumpur: Yayasan Karyawan.

Hassan Ahmad. "Lidah Terputus, Bahasa dan Bangsa Pupus" dlm. *Dewan Bahasa,* Jilid 9. Bil. 4, April 2009.
Ishak Saat, 2011. *Radikalisme Melayu Perak 1945–1970.* Pulau Pinang: Penerbit Universiti Sains Malaysia
Ismail Hussein, 1984. *Sejarah Pertumbuhan Bahasa Kebangsaan Kita.* Edisi Kedua. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.
Jabatan Penerangan Malaysia, 2017. *Raja Payung Negara Daulat Sepanjang Zaman.* Kuala Lumpur: Jabatan Penerangan Malaysia.
Jabatan Penerangan Malaysia, 2019. *Malaysia Focus, 62 Years Hari Merdeka, The Story of Malaysia Independence, Volume* 2/2019. Kuala Lumpur: Jabatan Penerangan Malaysia.
Jabatan Penerangan Malaysia, 2019. *Raja dan Rakyat Berpisah Tiada.* Kuala Lumpur: Jabatan Penerangan Malaysia.
Khairil Annas Jusoh, 2014. *Dustur Wa Salatin: Perlembagaan dan Para Sultan.* Shah Alam: Yayasan Penyelidikan Transformasi.
Mohd Rosmizi Abd Rahman *et al*., 2011. *Agama-agama di Dunia.* Nilai: Universiti Sains Islam Malaysia.
Muhammad Yusoff Hashim, 2008. *Tun Perak dalam Sejarah dan Dinamisme Ketamadunan Bangsa.* Melaka: Institut Kajian Sejarah dan Patriotisme Malaysia.
Muhammad Yusoff Hashim, 1980. "Islam dalam Sejarah Perundangan Melaka di Abad ke-15/16", dlm. Khoo Kay Kim (ed.) *Islam di Malaysia.* Kuala Lumpur: Penerbitan Persatuan Sejarah Malaysia.
Nik Anuar Nik Mahmud, 1999. *Tok Janggut Pejuang atau Penderhaka?.* Bangi: Jabatan Sejarah Universiti Kebangsaan Malaysia.
Nik Hassan Shuhaimi Nik Abdul Rahman. "Sejarah Tulisan Jawi melalui Kajian Arkeologi di Alam Melayu" dlm. *Jurnal Arkeologi Malaysia*, Bil. 22, 2009.
Nik Safiah Karim, 2004. *Bahasa Melayu Sedekad Lalu.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.
Nik Safiah Karim, 2011. *Perancangan Bahasa: Ideologi Bahasa Melayu.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.
Ramlah Adam, 1994. *Dato' Onn Jaafar Pengasas Kemerdekaan.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.
Ramlah Adam, 1999. *Sumbanganmu Dikenang.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.
Ramlah Adam, 2003. *Pejuang-pejuang Kemerdekaan.* Melaka: Institut Kajian Sejarah dan Patriotisme Malaysia.
Sayyidah Nur Najwa, 2014. *Bunga Raya, Bunga Kebangsaan, Siri Keunikan Bunga-bungaan.* Kuala Lumpur: Penerbitan D.E.
Sulaiman Zakaria, 1993. *Kemerdekaan Persekutuan Tanah Melayu.* Kuala Lumpur: Pustaka Mutiara.
Syed Idrus Syed Ahmad Syed dan R. Santhiram, 1990. *Perkembangan Pendidikan di Sarawak.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.
Tan Yao Sua, 2010. *Isu Bahasa, Etnik dan Pembinaan Negara Bangsa dalam Sistem Pendidikan Malaysia.* Pulau Pinang: Penerbit Universiti Sains Malaysia.
Wan Norhasniah Wan Husin, 2012. *Peradaban dan Perkauman, Hubungan Etnik Melayu–Cina.* Kuala Lumpur: Penerbit Universiti Malaya.

மலேசியத் தேசியப் பழஞ்சுவடிக் காப்பக (Arkib Negara Malaysia) பட அட்டைகள் பட்டியலும் அவ்வப்போதைய இதர தகவல்களும்.




RM21.00

ISBN 978-983-49-2950-3

9 789834 929503

ET095001